சித்திர மடல்

பதிப்பாசிரியர்:

பெ. தூரன்

1972

புதுமலர் நிலையம்

சித்திர மடல்

புதுமலர் நிலையம்

புதுமலர் பிரஸ்
கோயமுத்தூர்.

Q. H. C. B. 105.

விலை ரூபாய் ஒன்றரை.

காளமேகப் புலவர் இயற்றிய

பாவை - தெய்வங்கள்பெருமாள்

சித்திர மடல்

பதிப்பாசிரியர்

பெ. தூரன்

புதுமலர் நிலையம்
கோயமுத்தூர்.

முதல் பதிப்பு 1947 ஜன.

பெ. தூரன் இயற்றிய வேறு நூல்கள்.

வெளியானவை.

1. பிள்ளை வரம்-சிறுகதைத் தொகுதி
2. தமிழிசைப் பாடல்கள்

விரைவில் வெளிவருபவை

1. குழந்தை உள்ளம்-மனத்தத்துவம்
2. பிஞ்சுப் பிறை - கவிதைகள்
3. பூவின் வாழ்க்கை - கட்டுரைகள்
4. தமிழிசைப் பாடல்கள்-2ம்.தொகுதி
5. இசைமணி மாலை - பாடல்கள்

ஒரு கதை

கட்டுறுதியுள்ள இளங்காளை அவன். கன்னிப் புதுமை பொங்கும் கட்டழகி அவள். எதிர்பாராது இருவரும் காட்டு வழி தனிலே சந்திக்கின்றனர். அவள் கிளி ஓட்டுவதற்காகப் புனத்திடையே வந்திருந்தாள். அவன் மலைவளங்கண்டு இன்புறுவதற்காகப் புறப்பட்டு இயற்கை அழகிலே உள்ளத்தைப் பறி கொடுத்துக் கால் போன போக்கில் நெடுந்தூரம் வந்திருக்கிறான். அவன் உள்ளத்தை அவள் கவர்ந்தாள். அவள் உள்ளத்தை அவன் கவர்ந்தான். காதல் என்னும் தேன் நெருப்புக் கன்னியையும் காளையையும் தீண்டி விட்டது ஒரே மூச்சில். புதியதோர் இன்ப உணர்ச்சி இருவர் உள்ளங்களிலும் சுரக்கின்றது ஒரே மூச்சில்.

அவள் அழகை அவன் தனது இரு கண்களாலும் அள்ளிப் பருகுகின்றான். விழிக்கோணத்தில் அவனது தடந்தோள்களையும், அகன்ற மார்பினையும், ஒளி பொருந்திய முகத்தினையும் அவள் குனிந்தவாறே எட்டிப் பிடிக்கின்றாள்.

ஒருவரோ டொருவர் பேச வேண்டு மென்று பேராவல்தான். இருப்பினும் அறிமுக மில்லாதவருடன் எப்படிப் பேசுவது? பேச வாயெடுத்தாலும் மனம் துணியவில்லையே. நாணம் வந்து குறுக்கிடு கின்றதே.

இவ்வாறு அன்று அவர்கள் பிரிகின்றனர். ஆனால் ஆசை மட்டும் பிரியவில்லை. அது இரு புறத்திலும் வளர்ந் தோங்குகின்றது.

அவளை மறக்க முடியாமல் இளைஞன் தன்னை மறந்து விடுகின்றான். தோழர்களோடு இனிதிருக்கும் போதும்

அவன் எண்ணம் எங்கேயோ திரிந்து கொண்டிருக்கிறது. அவர்களுடைய வார்த்தை யெல்லாம் அவன் செவியில் புகுவதில்லை. அவர்களுடைய கேலிப் பேச்சும் காற்றிலே பறந்து விடுகிறது.

மீண்டும் அவளைக் கண்டு களிக்க முடியுமா என்றேங்கி மறு நாளும் அவன் முன்சென்ற வழியிலேயே செல்லுகிறான். அவளும் அவனை எதர்பார்த்துக் கொண்டிருப்பதாகத்தான் தோன்றுகிறது. ஆனால் அவனைக் கண்டதும் திடுக்கிட்டுப் பின் வாங்குகிறாள். பாங்கியை எதிர்பார்ப்பது போல மறுபுறம் பார்க்கிறாள். பிறகு தலை குனிந்து நிற்கிறாள். உள்ளத்தில் அவள் கொண்டுள்ள ஆவல் மட்டும் நிலம் நோக்கி இருக்கும் நெற்றிப் பிறையிலே சுடர் விடுகின்றது.

முதலில் இளைஞனும் தடுமாறித் தயங்கி நிற்கிறான். தான் அங்குக் காரணமின்றி வந்தது சரியல்ல என்பது போன்ற ஒரு உணர்ச்சி அவன் நெஞ்சிலே சிறிது அச்சத்தையும் கலக்கத்தையும் உண்டாக்குகின்றது. அதே சமயத்தில் அவள்பாலுள்ள காதல் அவற்றை உதறித் தள்ளிக் கொண்டு வேறொன்றிலும் எண்ணம் செல்லாதவாறு பெருக் கெடுக்கின்றது.

எப்படியோ அவன் பேச வாயெடுத்து விட்டான். என்ன பேசுவது, எப்படித் துவங்குவது, என்ன வார்த்தை சொன்னால் குற்றமாகாது என்றெல்லாம் எண்ண அலைகள் காதற் பெருக்கிலே புரளுகின்றன. ஆர அமரச் சிந்தித்து முடிவு செய்ய நேர மெங்கே? கன்னியின் முன்னால் போய் நின்றும் நில்லாமலும், நின்றால் தவறாக நினைப்பாளோ என்றும், சென்றால் தன் ஆவல் நிறைவேறாதே என்றும் தடுமாறியாகி விட்டது. அந்த நிலை

யில் வெகு நேரம் யோசிக்க முடியுமா? ஏதாவது ஒன்றைச் சொல்ல வேண்டியதல்லாமல் வேறென்ன செய்வது?

"அருகிலே தண்ணீர் அகப்படுமா? அதிக தாகமாக இருக்கின்றது" என்ருன்.

அவள் என்ன பதில் உரைப்பாள்? காட்டாறு ஒன்று எதிரிலேயே திடுதிடுவென்று இரைந்து ஓடி அந்தக் கேள்வியை அனுவசியமாகச் செய்துகொண்டிருக்கிறது. கலக்க நிலையிலே காளைக்கு அதன் பேரோசை காதில் படவில்லை. தண்ணீர் கேட்பதுதான் ஏற்றதாக இருக்குமென நினைப்பு வந்த பொழுதே கேட்டு விட்டான்.

வட்ட மதி முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு கன்னி அந்தக் கானூற்றுப் பெருக்கையே குறிப்பிட்டுப் பேசலானுள். "அதோ, முன்னுலே ஒரு..." ஆனால் இங்கே பதில் சடக்கென்று முறிந்து விட்டது. எதிரில் உள்ள யாற்றைப் பற்றிப் பேசினுல் அவன் உடனே அதை நோக்கிப் போகத்தானே வேண்டும்? மேலும் அங்கு நிற்கவோ பேசவோ என்ன முகாந்திரம் இருக்கின்றது? அவன் உடனே சென்று விடுவதில் அவளுக்கும் விருப்பமில்லை போலிருக்கிறது. "தண்ணீர் இங்கேயே இருக்கிறது தருகிறேன்" என்று ஒருவாறு தடுமாற்றத்துடன் மொழியாடிச் சட்டென்று எட்டிச் சென்று பரண்மேல் மட்கலயத்தில் வைத்திருந்த நீரை ஒரு சிறு பொற் சிரகத்தே ஊற்றலானுள். அந்த அன்புச் செய்கை அவனுக்குப் போதும்.

முன்பே குறிப்பிட்டபடி இந் நிகழ்ச்சிகளெல்லாம் எண்ணி எண்ணித் திட்டமிட்டு நடந்தவை அல்ல. முதல் நாளிரவிலும், வரும்போதும் எத்தனையோ திட்டங்களெல்லாம் உள்ளத்தில் எழுந்தெழுந்து மோதியிருக்கும்.

இருவர் உள்ளங்களையும் பற்றித்தான் பேசுகிறேன். ஆனால் முடிவாக நடைபெற்றது, நடைபெறுவது, என்னவோ, ஏதோ அந்த க்ஷணத்திலே காதல் வெள்ளக் கலக்கத்திலே மேலெழுந்து தோன்றியது தான்.

திரும்பி வரும்போது காதலன் அன்றைய நிகழ்ச்சிகளை எண்ணி எண்ணி உள்ளத்திலே களிப்படைகிறான். அருகிலேயே ஓடிய ஆற்றொலியைக் கேட்டுக் கொண்டே தண்ணீர் எங்கே கிடைக்கு மென்று கேட்டேனே, என்ன முட்டாள்தனம் என்று நினைத்து வெட்கப்படுகிறான். ஆனால், அதைப்பற்றி என்ன; அவள் தப்பாக நினைக்கவில்லையே என்று தன்னையே தேற்றிக் கொள்கிறான். இனிமேல் சந்திப்பதற்கும் அந்தக் கேள்வியல்லவா காரணமாயிற்று என்று அதைப் போற்றுகிறான். வழி நெடுக இதே சிந்தனை. இரவிலும் அதுவேதான்.

இப்பொழுது அவர்கள் அநேகமாகத் தினமும் சந்திக்கிறார்கள். மாலையில், இரவில், நண்பகலில் எந்த நேரமென்றில்லை. சமயம் வாய்க்கும் போதெல்லாம் ஒருவரை ஒருவர் கண்டு இன்புறுகிறார்கள்; பேசிப் பேசி மகிழ்கின்றார்கள். இளமை எழிலின் பொங்கல் ஐம்பொறிகளுக்கும் அமுதமயமான விருந்தாக அமைகின்றது. ஏரிக்கரையிலே, கானகத்து மரச் செறிவிலே, குறிஞ்சிச் செடிப்புதர் மறைவிலே, தினைப்புனத்திலே காதலனும் காதலியும் இன்பக் களிப்பிலே மூழ்கிச் சில நாளிருந்தார்கள்.

ஆனால் இப்படி மறைவில் ஒரு சில நாழிகை நேரம் சந்திப்பது மட்டும் இப்பொழுது அவர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை. மறைந்து மறைந்து சமயம் பார்த்துப் பார்த்து இரகசியமாகக் கால் நாழிகை கூடிப் பிரிவதால்

அவர்களுடைய வளரும் காதல் துன்பத்தையே பெருக்கிற்று. அல்லும் பகலும் அறுபது நாழிகையும் ஒன்றியிருக்க அவர்கள் துடித்தார்கள். விட்டுப் பிரிவதென்ருல் இள உள்ளங்கள் வெம்பி மருகின.

கன்னி அழுங்கி சொன்னுள். "எனக்கு இப்பொழுது இன்ப மென்பதே இல்லை. சதா நான் துன்பத்திலேயே அழுந்திக்கிடக்கிறேன். உங்களைக் காணுத போது காண வில்லையே என்ற ஏக்கம்; கண்டுவிட்டால் சீக்கிரம் பிரிய வேண்டுமே என்ற கலக்கம். ஆகவே என் துன்பத்திற்கு முடிவில்லையே" என்று தனது காதலின் ஆழத்தை வெளிப்படுத்துகிருள்.

காளையவன் பதில் பேசுகிருன்: "உன்னைப் பிரியும் போதெல்லாம் என் உயிரைப் பிரிந்தது போலிருக்கிறேன். என்னுயிர் தினமும் போய்ப் போய் மீள்கின்றது" என்று காதல் அனற் கொழுந்தை அவன் வார்த்தையிலே தீட்டுகின்ருன்.

ஆனுல் அவ்வாறு ஒரு சில நாழிகை நேரமாவது சந்திப்பதற்கும் திடீரென்று ஒரு தடங்கல் ஏற்பட்டுவிட்டது. தினைப்புனக் காவல் முடிந்தது. கன்னியின் பெற்ருேர்கள் அவளை வீட்டிற்கு அழைத்துக் கொண்டனர். அங்கே சென்று அவளை நாளும் சந்திக்க முடியுமா?

காதலன் துடித்தான். சந்திக்க வழி தேடினுன். என்னென்னவோ உபாயங்கள் அவன் உள்ளத்திலே தோன்றி மறைந்தன. கடைசியில் அவளுடைய உயிர்த் தோழியின் உதவியை நாடுவது தான் சரியென முடிவிற்கு வந்தான். ஆனுல் எப்படி அவளிடம் விஷயத்தை வெளிப்படுத்துவது? இதற்கும் ஒரு பெரிய ஆலோசனை. அதன்

முடிவிலே தலைவியிடம்கொடுக்குமாறு அவள் நளிமகிழும் பூக்களால் தொடுத்த ஒரு மாலையைத் தோழியிடம் தந்து பார்க்கலாம் என்று தீர்மானிக்கிறான்.

ஆனால் உயிர்ப் பாங்கியை வசப்படுத்துவது அவ்வளவு இலேசான காரியமா? அவளுக்குத் தலைவியின் இன்பமும் வாழ்வுமே பெரிதென்றாலும் யாரோ ஒரு இளைஞன் தருகின்ற மாலையை ஏற்றுக்கொண்டு அவளிடம் செல்லுவாளா? அவன் உண்மையாகக் காதலிக்கிறான் என்பதற்கு என்ன சான்றிருக்கிறது? அவன் வஞ்சக நெஞ்சமுள்ளவனாக இருப்பின் பின்பு தலைவியின் வாழ்வே குலைந்து விடுமே. அதனால் தோழி சர்வ ஜாக்கிரதையாக இருக்கிறாள். முதலில் தனக்கு அக்கன்னிகையைத் தெரியாது என்று பெரும் பொய் பேசுகிறாள். பிறகு, "நீயே அவளிடம் நேரிற் சென்று மாலையைக் கொடு; நான் ஆளில்லை" என்று கண்டிப்பாகச் சொல்லுகிறாள்.

காதலனுடைய இரக்கக் குரல் அவளைச் சுலபத்தில் இணங்கும்படி செய்ய வல்லதா யில்லை.

தனது காதலின் வலிமையையும், தூய்மையையும் அறியாது தோழி உரைத்த வார்த்தைகள் அவன் உள்ளத்தில் தியைப் பரப்பின. அவன் துடி துடித்தான். என்னுதன வெல்லாம் எண்ணி எண்ணி மாழ்கினான்.

கடைசியாக அவனுக்கு ஒரு உறுதி பிறக்கின்றது: "எனது காதலின் பெருமையை அனைவரும் அறியும்படி செய்வேன்; அல்லது அந்த முயற்சியில் உயிரையே தியாகம் செய்வேன்" என்ற எண்ணம் வலிமையோடு மேலோங்குகின்றது. அதனால் தோழியிடம் மிடுக்காகப் பேசலுற்றான். "எங்கள் இருவரையும் சேர்த்து வைக்க

இணங்காவிடில் நான் ஊரார் அறிய மடலேறி என்காதலை நிலை நாட்டுவேன்'' என்று சபதம் செய்கின்றான்.

மடலேறுவேன் என்ற வார்த்தையில் தொனித்த உறுதி அவனுடைய காதலின் ஆழத்தைப் பாங்கிக்கு ஒருவாறு வெளிப்படுத்தியது. அதனால் அவள், ''நாளைக்கு வந்தால் ஏற்றது செய்கிறேன். அவசரப் பட்டு ஒன்றும் செய்ய வேண்டாம்'' என்று இணங்கியும் இணங்காமலும் பதில் கொடுத்து அவனை அனுப்பி விடுகிறாள். யோசித்து முடிவுக்கு வரவும், தலைவியின் உள்ளத்தைச் சற்று தெளிவாக உணரவும் ஒரு நாளாவது அவளுக்கு வேண்டாமா?

ஊர் நடுவே நாற்சந்தி ஒன்றில் என்றுமில்லாத ஒரு புதிய அவலக் காட்சி தென்படுகிறது. பனை மடலால் செய்த ஒரு விநோதக் குதிரை நிற்கிறது. பனங்கருக்கே உடல், பனங்கருக்கே முகம், பனங்கருக்கே வால் இப்படி உருவாகிய புரவியின் மேலே விசனமே வடிவாக, உறுதியே வடிவாக, காதலே வடிவாக ஒரு இளைஞன் அமர்ந்திருக்கிறான். உடம்பெல்லாம் திருநீறு பூசியிருக்கிறான். கழுத்திலே எருக்கம்பூ மாலை; எலும்பு மாலை; பூளைப்பூ மாலை. அவன் நாட்ட மெல்லாம் எதிரிலே தொங்க விட்டிருக்கும் ஒரு இள நங்கையின் ஓவியத்திலே பதிந்திருக்கின்றது.

இக் காட்சியைப் பார்த்தவர்க ளெல்லாம் துணுக்குற்று நிற்கிறார்கள். பிறகு தங்களுக்குள் மெதுவாக ஏதோ பேசிக் கொள்கிறார்கள்; ஏதோ கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

ஊரெல்லாம் செய்தி பரவி விடுகிறது. எங்கும் ஒரே பரபரப்பு. எங்கும் அக் கட்டழகனைப் பற்றியே பேச்சு.

மறு நாளும் அந்த மடற் குதிரையும், திடக் குமரனும் அப்படியே காட்சி யளிக்கிறார்கள். சிறிதும் இடம் பெயர்ந்ததாகத் தெரிய வில்லை. குதிரைதான் உயிரற்றது; உணர் வற்றது; தன் தலைவனையே துன்புறுத்துவது. ஆனால் அந்த இளைஞன் அன்னந் தண்ணீரை வெறுத்து வைராக்கியமாக அமர்ந்திருக்கின்றானே அவனுடைய துன்பத்தை நீக்க ஒரு வழியில்லையா?

மேலும் ஒரு நாள் மறைந்து விட்டது.

மூன்றாவது நாளன்றும் அந்தத் திரண்ட தோள்களையுடைய வாலிபன் மெய் சோர்ந்தும் உறுதி சோராமல், ஓவியத்தில் கண்ட கன்னிகையையே நோக்கி மடற் குதிரையில் அமர்ந்திருக்கின்றான்.

ஊரிலுள்ள பல பெரியவர்கள் பொது மன்றிலே கூடுகிறார்கள். எவ்வகையிலாவது அக் காளையின் துன்ப விரதத்தை நிறுத்த வேண்டுமென்று உறுதி கொள்ளுகிறார்கள். இல்லா விட்டால் அவன் உயிர் துறப்பது நிச்சயம் என்று நன்கு தெளிவாகி விட்டது.

உயிர்ப் பாங்கி இவற்றை யெல்லாம் காண்கிறாள். கண்டு உளம் நடுங்கி, "ஐயோ இத்தனை துன்பத்திற்கும் நான் மாலையைப் பெற்றுத் தலைவியிடம் சேர்க்காததல்லவா காரணம்?" என்று வருந்தி விம்மி அழுகின்றாள். அவன் உயிர் நீங்கினால் தலைவியும் உயிர் தரிக்க மாட்டாள் என்ற எண்ணம் அவளுக்கு ஆற்றொணாத் துக்கத்தைக் கொடுக்கின்றது.

தோழி விம்முகின்றாள். தேம்பி அழுகின்றாள். தூக்கத்திலே ஏன் இப்படித் தேம்புகிறாள் என்று பிறர் எழுப்பிக் கேட்ட போது தான் அவளுக்குத் தான் கண்ட தெல்

லாம் கனவு என்று தெரிய வந்தது. தலைவன் மடலூர்ந்ததும், பெரியோர்கள் பொது மன்றில் கூடியதும் கனவில் கண்ட காட்சிகளே.

ஒரு பெருமூச்சு அவள் மார்பைப் பிளந்து வெளி வந்தது. இப்பொழுது அவளுக்கு உண்மையிலே மகிழ்ச்சி தான். 'நாளைக்கு நிச்சயம் அவனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி விட வேண்டும். வேறு யோசனை செய்யக் கூடாது' என்று முடிவு செய்து கொள்ளுகிறாள்.

தோழியின் உதவியால் சில காலம் காதலர்களின் கூட்டம் நடைபெறுகின்றது. இருந்தாலும் அதுவும் மறைமுகமான சிறிது நேரக் கூட்டந்தானே? மாறாக் காதலருக்கு அது எத்தனை நாள் திருப்தி யளிக்கும்?

அவர்கள் எக்காலமும் பிரியாது கூடியிருக்கும் பேற்றை விரைவிலேயே பெறுகிறார்கள். தோழியின் உதவியால் திருமணத்திற்குப் பெற்றோர்களின் சம்மதம் கிடைத்து விடுகிறது. சிறப்பாக மணமும் நடைபெறுகிறது.

புனத்திலே தற்செயலாக அன்று சந்தித்த காதலர்கள் இன்று என்றும் பிரியாதபடி மணவாழ்க்கையில் பொருந்துனார்கள். அதற்குப் பெரியதோர் துணையாயிருந்த தோழியைக் கண்களில் ஆநந்தம் துளிக்க வணங்கினார்கள்.

காதலர் பெற்ற இன்பமும், பெற்றோர் பெற்ற இன்பமும், தோழி பெற்ற இன்பமும் ஒன்றுக் கொன்று மிகுந்திருந்தன. வாழிய காதல்; வாழிய காதலர்.

மடல்

மேலே கூறிய கதை பொதுவாக ஓர் அளவிற்கு மடல் ஏறுதலைப் பற்றி விளக்குகின்றது. இனி இலக்கண நூல்கள் அதைப் பற்றி என்ன சொல்கின்றன என்பதை ஆராய்வோம்.

ஒத்த தலைமகன் ஒருவனும், ஒத்த தலைமகள் ஒருத்தியும் எதிர்பாராது சந்தித்துக் காதலிக்கிறார்கள். இயற்கைப் புணர்ச்சியும் நிகழ்கின்றது. பிறகு பிரிவாற்றாமல் பிரிந்து காதலன் பாங்கனை அடைகின்றான். ஆனால் தலைவியைச் சந்திக்க வேண்டுமென்ற ஆசை மட்டும் வளர்ந்து கொண்டே இருக்கிறது.

அதற்கு அவன் தலைவியின் உயிர்ப் பாங்கி ஒருத்தியின் உதவியை நாடுகின்றான். தலைவியிடம் கொடுக்கக் கையுறையும் கொண்டு செல்கின்றான். பாங்கியிடம் தன் கருத்தைக் கெஞ்சும் மொழிகளில் வெளியிடுகின்றான்.

ஆனால் தோழி அவனுக்கு உதவி செய்ய எளிதில் இணங்குவதில்லை. அதுகண்டு உளம் வாடிய தலைவன் தன் காதலை நிலை நாட்ட மடலேறுவதாகக் கூறுகின்றான்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் களவியல் சூத்திரமொன்று பாங்கிற் கூட்டத்தைப் பற்றிப் பேசும் போது மடல் ஏறுவதாகக் கூறும் நிலைமையையும் குறிக்கின்றது. அது வருமாறு:-

பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுப்பினும்
ஊரும் பெருங் கெடுநியும் பிறவும்
நீரிற் குறிப்பின் நிரம்பக் கூறித்

தோழியைக் குறையுறும் பகுதியும் தோழி
குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறலும்
தண்டா திரப்பினும் மற்றைய வழியும்
சொல்லவட் சார்த்தலிற் புல்லிய வகையினும்
அறிந்தோ ளயர்ப்பின் அவ்வழி மருங்கிற்
கேடும் பீடும் கூறலும் தோழி
நீக்கலி னாகிய நிலைமையு நோக்கி
மடன்மா கூறும் இடனுமா ருண்டே

(தொல். பொருள். சூத்திரம் 102)

தோழியிற் கூட்டம் பற்றிய இலக்கணம் இது. மடன்மா ஏறுவதைப் பற்றித் தஞ்சைவாணன் கோவை உரையிலே பின் கண்ட குறிப்புக் காணப்படுகிறது.

"மடலேறலாவது—தலைவன் ஒவ்வாக் காமத்தால் பனங் கருக்கால் குதிரையும், பனந்தருவி லுள்ளன வற்றால் வண்டில் முதலானதுவும் செய்து அக் குதிரையின் மேலேறுவது. மடலேறுவோன் திகம்பரனாய், உடலெங்கும் நீறு பூசி, கிழி ஓவியர் கைப்படாது தானே தீட்டி, கிழியின் தலைப்புறத்தில் அவள் பேரை வரைந்து கைப்பிடித்து, ஊர்நடுவே நாற்சந்தியில் ஆகாரம் நித்திரையின்றி, அக்கிழிமேற் பார்வையும் சிந்தையும் இருத்தி, வேட்கை வயத்தனாய் வேறு உணர்வின்றி, ஆவூரினும் அழல் மேற்படினும் அறிதலின்றி, மழை வெயில் காற்றால் மயங்காதிருப்புழி, அவ்வூரிலுள்ளார் பலரும் கூடி வந்து நீ மடலேறுதியோ? அவளைத் தருதும், சோதனை தருதியோ? என்ற வழி இயைந்தானாயின், அரசனுக் கறிவித்து அவனேவலால் ஏறும் முறைமை: பூளை, எலும்பு, எருக்கு இவைகளால் கட்டிய மாலை யணிந்து கொண்டு அம்மாவின் மேலேற, அவ்வடத்தை வீதியில் ஈர்த்தலும், அவ்வுருளை உருண்டோடும் பொழுது, பனங்கருக்கு அறுத்த இட

மெல்லாம் இரத்தந் தோன்றாது வீரியம் தோன்றின், அப்போது அவனை அலங்கரித்துக் கொடுப்பது; இரத்தங் கண்டுழி அவனைக் கொலை செய்து விடுவது. இவை புலவரால் நாட்டிய வழக்கென்று உணர்க.''

மடன்மா ஏறுவேனென்று உரைப்பது கைக்கிளை என்றும், ஏறுவது பெருந் திணை என்றும் தொல்காப்பியம் விளக்குகின்றது.

ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறந்
தேறுத லொழிந்த காமத்து மிகுதிற
மிக்க காமத்து மிடலொடு தொகை இச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே

(தொல். பொருள். சூ 51)

என்பதனால் இதனை அறியலாகும்.

குறுந் தொகைப் பாட்டொன்று மடலேற எண்ணுவதைக் குறிக்கின்றது.

விழுத்தலைப் பெண்ணை விளையன் மாமடல்
மணியணி பெருந்தார் மார்பிற் பூட்டி
வெள்ளென் பணிந்துபிற ரெள்ளத் தோன்றி
ஒருநாள் மருங்கிற் பெருநா ணீக்கித்
தெருவி னியலவுந் தருவது கொல்லோ
கலிங்கவி ரசைநடைப் பேதை
மெலிந்திலள் நாம் விடற் கமைந்த தூதே

(குறுந்–182)

மற்றொரு பாட்டு மடலூர்தலையும், குறிப்பாக வரைபாய்தலையும் பேசுகின்றது.

மாவென மடலும் ஊர்ப பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே

(குறுந்-17)

மடலூறும் போது எலும்பாலும், எருக்காலும் ஆன மாலைகளை அணியும் வழக்கத்தை இப்பாடல்கள் குறிக்கின்றன.

திருக்குறளில்,

காமம் உழந்து வருந்தினார்க் கேமம்
மடலல்ல தில்லை வலி

என்பது முதல் சில குறள்கள் மடலேறலைப் பற்றிக் கூறுகின்றன.

இவ்வாறு மடலேறு தலைப்பற்றிப் பழைய நூல்களில் சில குறிப்பிட்ட தனிப்பாடல்கள் தான் காணப்படுகின்றன. ஆனால் மடல் என்ற தனிப் பிரபந்தம் பிற்காலத்திலேதான் தோன்றியிருக்கின்றது. திவ்யப் பிரபந்தத்தில் வந்துள்ள திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்த பெரிய திருமடலும், சிறிய திருமடலும், வருணகுலாதித்தன் மடலும், தாயுமானசுவாமி மடலும் சித்திர மடலும் இன்று நமக்குத் தெரிந்தவை. இவையெல்லாம் பிற்காலத்தவைகளே.

நம்பி அகப்பொருளுக்கு இலக்கியமாய் அமைந்ததென்று கருதப்படும் தஞ்சைவாணன் கோவையில் மடலேறுதலைப் பற்றி ஒரு சில செய்யுட்கள் உள்ளன.

பாங்கி தான் கொண்டு வந்த கையுறையை ஏற்றுத் தலைவியிடம் கொடுக்க உடன்படாதிருக்கவே, தலைவன் மடலேறுதலே காரிய மென்று தன் நெஞ்சினை நோக்கிக் கூறுகின்றான்.

திருந்தார் தொழுங்கழற் சேயன்ன வாணன்தென்
மாறைவெற்பில்
அருந்தா அமுதன்ன அஞ்சொல்நல் லார்அழ
கார் குழைதோய்
பெருந்தாரை வேல்விழி தந்தவெங் காமப் பிணிதனக்கு
மருந்தாவது நெஞ்ச மேயில்லை வேறு மடலன்றியே

பின்பு அவன் தோழியை நோக்கிக் காதலர்களின் செய்கை இன்னதெனக் கூறுகின்றான். காதல் வெள்ளம் கரைகடந்து செல்லும் போது இளங்காளையர் மடலூர்ந்து ஊர்கள் தோறும் செல்வர்; அதனால் தமது எண்ணம் கைகூடாவிடில் வரைபாயச் செல்வர் என்கின்றான்.

விரையூர் குழலியர் தந்த சிந்தாகுல வெள்ளநிரை
கரையூர் பொழுதிளங் காளையர் தாங்கிழி கைப்பிடித்
[துத்
தரையூர் தொறும்பெண் ணைமாமட லூர்வர்
தவிர்ந்துபின்னும்
வரையூர்வர் தஞ்சையர் கோன்வாணன் மாறையில்
வாணுதலே

இன்று நான் உங்களைப் பணிந்து வேண்டுகிறேன். அதனால் என்குறை தீராவிடில் நாளைக்கு மடன்மா ஏறி வருவேன் என்று தனது உறுதியைத் தலைவன் வெளியிடுகின்றான்.

வன்பணி போல்நிலந் தாங்கிய வாணன்தென்
மாறைவெற்பில்

மின்பனி பூண்முலை மெல்லிய லீர்குறை வேண்டி யுங்கள்
முன்பனி வேன்இன்று நாளைவென் பூளை முகிழ் எருக்கோடு
என்பணி வேன்மடன் மேல்வரு வேன்இவை என் பணியே

இவ்வண்ணங் கூறிய தலைவனின் உறுதியையும், காதலையும் கண்டு தோழி கையுறை ஏற்றுக் கொள்கின்ருள்.

மேலே குறித்த நிகழ்ச்சிக்கு இலக்கணமாக நம்பி அகப்பொருள் விளக்கத்துக்கு 145, 146,-ம் சூத்திரங்கள் நிற்கின்றன. அவை வருமாறு:

இரந்து குறைபெருது வருந்திய கிழவோன்
மடலே பொருளென மதித்தலும் பாங்கிக்கு
உலகின் மேல்வைத் துரைத்தலும் அதனைத்
தன்மேல் வைத்துச் சாற்றலும் பாங்கி
தலைமகள் அவயவத் தருமை சாற்றலும்
தலைமகன் தன்னைத் தானே புகழ்தலும்
அவர்முலைப் பாங்கி அருளியல் கிளத்தலும்
கொண்டுநிலை கூறலும் என்றிவை ஏழும்
மடற்கூற் றிற்கு மடல் விலக் கிற்கும்
கடவ என்மனுர் கற்றறிந் தோரே

இது தலைவன் மடலேற நினைப்பதையும், அதை விலக்கத் தோழி முயலுவதையும் குறிக்கின்றது.

தலைவி யிளமைத் தன்மை பாங்கி
தலைவற் குணர்த்தலும் தலைவன் தலைவி
வருந்திய வண்ண முரைத்தலும் பாங்கி
செவ்வி அருமை செப்பலும் தலைவன்

செவ்வி எளிமை செப்பலும் பாங்கி
என்னை மறைப்பின் எளிதென நகுதலும்
அந்நகை பொருஅ தவன்புலம் பலும்அவள்
தேற்றலும் கையுறை ஏற்றலும் கிழவோன்
ஆற்றலும் என்னும் அவ்வொன் பானும்
குறைநேர் தற்குமடற் கூற்றெழி தற்கும்
முறைமையின் உரிய மூன்னுங் காலே

இது கையுறை ஏற்றலையும், மடல் ஏறுதிருக்கச் செய்தலையும் உணர்த்துகின்றது. இவ்விரு சூத்திரங்களின் விளக்கத்தை நம்பி அகப்பொருள் விளக்கத்திலே கண்டு கொள்ளலாம்.

இனி, மடல் என்னும் பிரபந்தத்திற்கு இலக்கணம் யாதெனக் கவனிப்போம். அதுபற்றிப்பன்னிரு பாட்டியல் என்ற சிறந்த பாட்டியல் நூல் பேசுகின்றது.

அறம் பொருள் வீடு நிறம்பெரி தழித்துச்
சிறந்த வேட்கை செவ்விதிற் பராஅய்ப்
பாட்டுடைத் தலைவன் இயற்பெயர்க் கெதுகை
நாட்டிய வெண்கலிப் பாவ தாகித்
தனிச்சொல் லொரீஇத் தனியிடத் தொருத்தியைக்
கண்டபின் அந்த ஒண்டொடி எத்தல்
மற்றவள் வடிவை உற்றுகிழி எழுதிக்
காமம் கவற்றக் கரும்பனை மடல்மா
ஏறுவர் ஆடவர் என்றனர் புலவர்

தனியிடத்தே ஒருத்தியைக் கண்டதனால் பிறந்த காதல் வருத்த அதனால் அவள் வடிவை எழுதி மடலேறுவர் ஆடவர்; அதைப்பற்றி எழுகின்ற மடல் எனும் பிரபந்தம் வெண்கலிப்பாவால் தனிச்சொல் ஒழித்துத் தலைவன் இயற்பெயருக்கு எதுகை நாட்டியதாகப் பாடப்பட வேண்டும் என்பது மேற்கண்ட சூத்திரத்தின் கருத்து.

மடல்மா ஏறுவர் ஆடவர் என்றிருப்பதினலே பெண்கள் மடல் ஏருரோ என்ற ஐயம் பிறக்கலாம். அது பற்றி மற்றெரு சூத்திரம் கூறுகின்றது.

மடன்மாப் பெண்டிர் ஏருர் ஏறுவர்
கடவுளர் தலைவ ராய்வரும் காலே

இதனுல் பெண்கள் மடல் ஏருர் என்றும், அப்படி ஏறுவதாலுைம் கடவுளே தலைவனுக அமைந்திருத்தல் வேண்டுமென்றும் தெரிகின்றன.

மடலேறுதலைப் பற்றியும், மடற்பிரபந்த இலக்கணத்தைப் பற்றியும் இதுவரை பொதுவாக ஆராய்ந்தோம். இனிக் குறிப்பாக இம்மடலை நோக்குவோம்.

தலைவன் தனியிடத்தே ஒரு மங்கையைக் காண்கின்ருன். கண்டு காதல் கொள்கின்ருன். "அவளைப் பெறுவதற்காக மடலேறுவேன்" என்று அவன் தனது உறுதியை வெளியிடுகின்ருன். இவையெல்லாம் இலக்கணத்தைப் பின்பற்றியே இருக்கின்றன. நூலும் கலிவெண்பாவில் யாக்கப்பட்டுள்ளது. ஆனுல் பாட்டுடைத் தலைவனது பெயருக் கேற்ப ஒரே துகையிலேயே நூல் முழுவதும் வரவில்லை. மேலும் ஒவ்வோர் இரண்டாம் அடியின் இறுதியிலும் தனிச்சொல் இருக்கின்றது. வருணகுலாதித்தன் மடலிலும் இவ்வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவையெல்லாம் நூலுக்கு அழகு தருவனவாகவே அமைந்துள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

நூல் நயம்

பூங்காவிடத்துச் சென்ற தலைவன் ஒருவன் தற்செயலாக ஒரு அழகிய நங்கையைக் காண்கின்றான். அவளுடைய பேரழகில் ஈடுபட்டு அதிசயமும் மயக்கமும் அடைந்து அவளைத் தெய்வமகளோ என ஐயுறுகின்றான். பின்பு, பாதம் மண்ணில் படுவதாலும், கண்ணிமைத்தலாலும் மானிடப் பெண்தான் என்ற தெளிவு பிறக்கின்றது. காதலும் கூடவே பிறக்கின்றது. தன்னுடன் இணங்கி இருக்கும்படி அவன் அவளை வேண்டுகிறான். ஆனால் அவள் மறுமொழி பகராது சென்று விடுகிறாள்.

தலைமகன் காதல் நோயால் வருந்திச் சோர்வுற்றிருக்கிறான். சோர்ந்த நிலையிலேயே உறக்கமும் வருகின்றது. கனவில் மீண்டும் அக் கன்னிகையைக் கண்டு எழுந்து மேலும் நெஞ்சம் புழுங்குகின்றான். அந்த நிலையிலே தனது ஆவலை நிறைவேற்றிக்கொள்ள மடலேறுதலே காரியமென்று துணிகின்றான்.

இதுதான் இந்நூலில் கூறப்பட்டுள்ள செய்தி. சுருக்கமானதுதான்; ஆனால் எவ்வளவு அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது! சம்பவங்கள் இங்கு முக்கியமல்ல; கவிதை நயமும், காதலால் வாடியவனுடைய உள்ள நிலைமையை எடுத்துக் காட்டும் திறனுமே நமது உள்ளத்தைக் கவர்கின்றன.

தலைவியின் வருணனை மிக உயர்வாக இருக்கின்றது. அவ்வருணனையும் தலைவன் தனது கரையற்ற காதலை

எடுத்துரைப்பதும், தலைவியைத் தன்னுடன் இணங்கி இருக்கும்படி வேண்டுவதும் சில இடங்களில் வரம்பு கடந்திருப்பினும் பொதுவாக அழகாக அமைந்துள்ளன.

பூங்காவிலே கண்ட மங்கையின் வருணனையோடு நூல் ஆரம்பமாகிறது. பிரமன் தனது தம்பியாகிய மன்மதனைச் சிவன் எரித்துக் கொன்ற பழிவாங்குவதற்காக இம் மோகனப் பெண்ணைப் படைத்திருக்கின்றானும். அவள் கட்டாத பூ மாலை; கிட்டாத பொற்பாவை; பாற்கடலில் பிறவாத வெண்ணிலா; மேகம் சேராத மின்னற் கொடி; சுவை பெற்ற தீபம். இவ்வாறு அழகியின் வருணனை அழகாகச் செல்லுகின்றது.

கண்களின் மருட்சியையும், அவற்றில் மின்னும் உணர்ச்சி மாறுதல்களையும்.

> கருகி வெளுத்துச் சிவந்து கூற்றுருளத்தைப்
> பருகி அமுதும் கடுவும் பாய்ந்து நிருகிக்
> குளிர்ந்து நிழல் எழுந்து

எனக் கவி நயம்படச் சொற்களிலே தீட்டுகிறார். அக் கண்கள் கூற்றுவனின் குருபீடமாக இருக்கின்றனவாம்!

அம் மங்கைக்கு இணை அவளேதான் என்னும் கருத்தை,

பளிங்கில்

> கண்ணில் புனைமணியில் கண்ணாடியிலன்றி

வேறெங்கும் மண்ணில் அவளுக்கு உவமை காண முடியாது என்று எழுதுகிறார்.

இன்னும்,

வாரந்தை யான் கேட்க மாநந்தை ஏன் நந்நீர் ?

தென்றல் வரக்கண்டு சாகாமல் கோத்திட்ட மீன் போல் குறைந்திட்டேன் என்பது போன்ற உவமை அழகுகளும் படித்துப் படித்து இன்புறற்பாலன. நூல் முழுவதையும் படித்து அதன் கவிதைச் சுவையை அனுபவிக்க வேண்டும் என்ற கருத்தினுல் விரிவாக எழுதாமல் இத்துடன் நிறுத்துகின்றேன்.

நூலாசிரியர் வரலாறு

இந்நூலை இயற்றியவர் காளமேகப் புலவராவர். இவரது சிலேடை, வசைப் பாடல்கள் பொதுவாக மக்களுக்குத் தெரிந்துள்ளன. 'வசைபாடக் காளமேகம்' என்றும், 'ஆசுகவியால் அகில உலகெங்கும், வீசுபுகழ்க் காளமேகமே' என்றும் இவரைச் சிறப்பித்துக் கூறியிருக்கிருர்கள்.

காளமேகப் புலவர் பதினைந்தாம் நூற்ருண்டிலே கும்பகோணத்திலே பிறந்தார். இவருடைய இயற்பெயர் வரதன் என்பது. சோழியப் பிராம்மணராகிய இவர் திருவரங்கப் பெரிய கோயிலிலே பரிசாரகராய்த் தொழில் நடத்தி வந்தார். அக் காலத்திலே அவருக்குத் திருவானைக்கா சிவாலயத்திலே தொண்டு செய்து வந்த மோகனங்கியிடம் காதல் ஏற்பட்டது. அவள் பொருட்டாக வரதன் திருவரங்கத்தைத் துறந்து சிவ தீட்சை பெற்று சம்பு நாதர் ஆலயத்திலே பணி செய்து வரலானுர்.

இவ்வாறு திருவானைக்காவில்ருக்கும் பொழுது இவருக்கு அகிலாண்ட நாயகியின் அருளினுல் கவிபாடும் திறமை யுண்டாயிற்று. அன்று முதல் யார் எதைப்

பற்றிக் கேட்டாலும் சற்றும் தயங்காது இவர் ஆசு கவிகளும், சிலேடைக் கவிகளும், சித்திர கவிகளும் பாடியதால் இவருக்குக் காளமேகம் என்ற சிறப்புப் பெயருண்டாயிற்று.

இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம்பாட் டாகாதோ - சும்மா
இருந்தால் இருப்பேன் எழுந்தேனே யாகில்
பெருங்காள மேகம் பிளாய்

என்று இவரே தம்மை எதிர்த்த ஒரு புலவரை நோக்கிப் பாடியதாகக் கூறுவதுண்டு.

இவருடைய விரிவான வரலாற்றையும், பாடல்களையும் தனிப்பாடல் திரட்டு, தனிச்செய்யுட் சிந்தாமணி, தமிழ் நாவலர் சரிதை முதலிய நூல்களில் கண்டு கொள்ளலாம்.

காளமேகப் புலவர் 200-க்கு மேற்பட்ட தனிப்பாடல்களும், திருவானைக்கா உலா, சித்திரமடல் ஆகிய பிரபந்தங்களும் இயற்றி யுள்ளார். வேறு சில நூல்கள் செய்ததாகவும் கூறுவதுண்டு. ஆனால் அவை இதுவரை வெளியாகவில்லை.

பாவை – தெய்வங்கள் பெருமாள்.

இவர் காளமேகப் புலவரை ஆதரித்த ஒரு வள்ளல். 'சினக்கலியை மாற்றும் தெய்வங்கள் பெருமாள் மண்டலீகரன்' என்று இவர் இந்நூலிலே குறிக்கப்படுகிறார்.

பாவை என்பது சோழ நாட்டிலுள்ள ஒரு ஊர் என்று அபிதான சிந்தாமணி குறிக்கின்றது. இந்நூலிலே பாவை என்பது பரவை என்றும் வருகின்றது. வேறொரு பிரதியிலே இது பருவை யென்றும் காணப்படுகின்றது.

முடிவுரை

பழைய ஏட்டுப் பிரதி ஒன்றிலிருந்து இந்நூலை நான் பெயர்த்தெழுதினேன். அவ்வாறு எழுதிக் கொண்டிருக்கும் போதுதான், பல ஆண்டுகளுக்கு முன்பே சித்திர மடல் அச்சாகி யிருக்கின்றதென்ற விஷயம் தெரிந்தது. ஆனால் அதன் பிரதிகள் இன்று அகப்படுவதில்லை. ஒத்திட்டு பார்ப்பதற்குக் கூட ஒரு பிரதி கிடைக்காமற் போயிற்று. கையெழுத்துப் பிரதி யொன்று மட்டும் எனக்குக் கிடைத்தது. ஏட்டுப் பிரதியில் விளங்காம லிருந்த ஒரு சில இடங்களைத் தெளிவு படுத்திக் கொள்ள அது சாதகமாக இருந்தது.

பழைய ஏடுகளிலிருந்து பெயர்த் தெழுதுவதி லுள்ள சிரமத்தை நான் இச் சிறு முயற்சியிலிருந்தே நன்கு அறிந்து கொண்டேன். தமிழ் அன்னைக்குச் சேவை செய்ய வேண்டு மென்ற ஆர்வத்தாலேயே இதில் நான் முனைந்தேன். இதில் ஏதாவது குறைபாடுகள் இருக்குமானல் அறிஞர்கள் எனக்கு அவற்றை எடுத்துக் காட்டி ஊக்கமளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏட்டுப் பிரதியை அன்புடன் உதவிய தமிழ் வித்வான் தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களுக்கும், கையெழுத்துப் பிரதியை உதவிய வித்வான் மு. அருணசலம் பிள்ளை அவர்களுக்கும், இந்நூலை அச்சிடுங்காலத்தில் திருத்தங்கள் செய்வதில் உதவியாக இருந்த வித்வான் கு. தாமோதரன் அவர்களுக்கும், சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிட்ட புதுமலர் நிலையத்தாருக்கும் என் மனமார்ந்த நன்றி உரியது.

பெரியசாமித் தூரன்.

சித்திர மடல்

காப்பு

(வெண்பா)

சீரார்தென் பாவைத்தெய் வங்கபெரு மாள் மீதில்
பாராய்ந்து சித்ரமடல் பாடவே - ஏரான
கொம்பன் உமையாள் குமாரன் உடன்பிறந்த
கம்பமத யானைமுகன் காப்பு.

நூல்

(கலி வெண்பா)

1 வையம் படைத்தருள மாபா ரதியுடனே
மெய்யம் புயத்தவிசில் வீற்றிருந்தோன் - ஐயம்பு

காப்பு. சீரார் - சிறப்பெலாம் நிறைந்த. தென் - அழகிய. ஏரான - அழகான. யானை முகன் - விநாயகன்.

'கம்பமதக் கடகளிற்றான்' என வருவதும் காண்க.

1. வையம் - உலகம். மாபாரதி - ஸரஸ்வதி. அம்புயம் - அம்புஜம் - தாமரை. தவிசு - ஆசனம். கலைமகளுடனே தாமரைத் தவிசில் வீற்றிருக்கின்ற உலகம் படைத்தருளும் பிரமன் என்க.

ஐயம்பு-மன்மதனுடைய மலரம்புகளாகிய ஐந்து. அவை தாமரை, அசோகம், குவளை, மாம்பூ, முல்லை என்பன.

பூந்தெரிந்த நம்பியெனும் போர்வேளைச் சங்கரனர்
பார்த்தெரித்த பண்டைப் பழிவாங்க, - ஏந்தரிய
அந்தவேள் தன்னுடனே அம்புவியில் விட்டதென
முந்தவே வந்துதித்த மோகனப்பெண் ; - இந்தி
ரெட்டாத இந்திராணி; செம்பிர வேலவர்க்கும்[ரற்கும்
எட்டாத பச்சை இளந்தோகை ;– கட்டாத
5 பூமாலை ; தட்டாத பொற்பாவை ; கற்பகப் பூ
மாமாலை யிற்பிறவா வாசவண்டு ; - காமாரி
ஏந்துகைக்கும் ஒவ்வா இளமான் ; இமையோர்கள்
மாந்துகைக்கும் எய்தாத வானமிர்தம் ; - வேந்தரிடம்
செல்லாத திரு ;மேகம் சேராத மின் ; படித்துச்
சொல்லாத கிள்ளைச் சுகப்பேடு ; - வெல்லா

---

2. ஐந்து மலர்ப் பாணங்களைத் தெரிந்து எடுத்துக் கொண்ட தம்பி. மன்மதன் திருமாலின் மகன்; ஆகவே பிரமனுக்குத் தம்பி. வேள் - மன்மதன்.

நெற்றிக்கண்ணால் சிவபிரான் மன்மதனை எரித்த கதை யாவரும் அறிந்ததே.

3. அம்புவி - அழகிய உலகம்.

4 வேலவர்க்கு எட்டிய பச்சை இளமயில் வள்ளி.

இவளோ எவருக்கும் எட்டாத பச்சை இளமயில்.

5. காமாரி - காமனை வென்றவன், சிவன்.

6. சிவன் ஒரு மானைத் தம் கரத்தில் ஏந்தியிருக்கிறார். இது அவர் ஏந்து வதற்கு ஒவ்வாத இளமான். மாந்துகை - குடித்தல். இமையோர் – இமைக்காத கண்ணுடைய தேவர். தேவர்கள் பருகு வதற்குக் கிடைக்காத அமிர்தம்.

மங்கையின் வருணனையை உள்ளத்தில் கற்பனை செய்து பார்க்க.

7. வேந்தரிடஞ் செல்லாத திரு. திரு – லக்ஷ்மி. மேகம் சேராத மின். படித்துச் சொல்லாத கிள்ளை - படித்துக் கொண்டதைத் தானே கிளி சொல்லுகின்றது. இது படித்துச் சொல்லாத கிளி. பேடு – பெண் பறவை.

நவரசமா யெவர்க்கு நல்குகைக்குங் காமன்
கவருகைக்கும் எட்டாக் கரும்பு ; - சுவைபெற்ற
தீபம் ; தெவிட்டாத தேன் ; உதிராப் பூங்கொம்பு ;
தாபம் தணிக்குந் தனிமருந்து ; - பாபம்
இருப்பு நரகைத்தவிர்த்து மெய்க்கலவி என்னும்
திருப்பதவி தந்தருளும் தெய்வம் ; - உருப்பொலிந்த
துண்டவட்ட வெண்மதியைச் சூடி, அறு கால் [வளைந்து
கண்டமட்டும் மெத்தக் கறுப்பாகி - மண்டியசெவ்
வந்திக்கோ லம்புனைந்து, வன்னமயி லாரிடமாய்,
அந்தப்புன் னாகம் அணிந்தருளி, - முந்தவே

---

8. வெல்லா நவரசம். காமன் வில் – கரும்பு. அவன் கையிலகப் படாத கரும்பு இவள்.

9. இவள் சுவை பெற்ற தீபம். தெவிட்டாத தேன். உதிர்ந்து போகாத பூக்களுடைய கொம்பு. தாபம் – தாகம்.

10. பொலிந்த – விளங்குகின்ற. உருப்பொலிந்த...குல தரன் போல் துலங்கியே – இவ்வரிகள் சிவனுக்கும் அம்மங்கையின் கூந்தலுக்கும் சிலேடையாக வந்துள்ளன.

11. சிவன் வெண்மதித் துண்டத்தைச் சூடியுள்ளார். மங்கையின் நெற்றியும் பிறைபோலிருக்கிறது. அந்தப் பிறையைச் சூடிய கூந்தல். அறுகால்–அறுகம் புல்லால். சிவன் அறுகம்புல்லை முடியில் அணிந்துள்ளார். அறுகால் – வண்டு. மங்கையின் முகத்தைத் தாமரை என மயங்கி வண்டு வளைந்து கொண்டிருக்கிறது. கண்டம் – கழுத்து. சிவன் கண்டங் கறுத்தவர். ஆல காலத்தை அணிந்திருத்தல் பற்றி. கூந்தலோ மிகக் கருப்பாக இருக்கின்றது.

12. சிவன் அந்தி வண்ணன். கோலம் – அழகு. வன்னம் – நிறம். வன்ன மயிலாரிடமாய் – நீல மயில் போன்ற உமையாள் இடது பக்கத்தி லிருக்க.

அழகிய மங்கையினை இருப்பிடமாகக் கொண்டு என்று கூந்தலைப் பற்றிக் கூறும்போது கொள்ள வேண்டும்.

புன்னாகம் – கொடிய பாம்பு, ஒரு மலர். சிவன் பாம்பை அணிந்துள்ளார். கூந்தலை மலர் அணி செய்கின்றது.

நீல மதனை முடித்து, நிரந் தரமும்
சூல தரன்போல் துலங்கியே - கோலம்
இருண்டு நெருங்கி எழுந்து படிந்து
சுருண்டு கவிழ்ந்து சுழிந்து - திரண்டெழுந்த
காரொத்துக் காடொத்துக் காவொத்துந் தூய அறல்
சீரொத்துத் தார்கட்டித் தேன்மொய்த்துச் - சாருற்
தேடிப் பயில்கருத்துந் தேம்பாளை யும்புழுகும் [றோர்
கூடிப் பரிமளிக்குங் கூந்தலாள் ; - ஆடரவைத்
தாங்கியிடுஞ் சங்கரனை நொந்தே சசிக்கொழுந்து
நீங்கியிடம் பெற்றனைய நெற்றியாள் ; - பூங்கண்
இருங்குவளை யோவனச மோஎனவண் டீட்டம்
மருங்குவளைந் தன்னபுரு வத்தாள் ; - தரங்கக்

---

13. நீலமதனை முடித்து – கருமை நிறம் பொருந்திய மன்மதனை எரித்து; நீல மலரைக் கூந்தலில் முடிந்து. நிரந்தரம் – முடிவில்லாமல். சூலதரன் – சிவன்.

15. கார் - மேகம். காடு – வனம். கா – சோலை. அறல் – கருமணல். தார் – பூங்கொத்து. சாருற்றோர் - சார்ந்துள்ள உறவினர்.

16. தேம்பாளை – தேன் பொருந்திய தென்னம்பாளை. ஆடரவை – ஆடுகின்ற அரவை. அரவு – பாம்பு.

17. சசி – சந்திரன். சசிக்கொழுந்து – பிறைச் சந்திரன். சிவனை நீங்கிப் பிறை இம்மங்கையை அடைந்தது என்று சொல்லும்படியான நெற்றி.

18. பூங்கண் – அழகிய கண். இருங் குவளை – பெரிய குவளை மலர். வனசம் – தாமரை. ஈட்டம் - தொகுதி. மருங்கு – பக்கத்தில்.

கண்களைக் குவளை யென்றும் தாமரை யென்றும் மயங்கி வண்டுகள் வளைந்து கொண்டிருப்பது போன்ற புருவத்தாள்.

தரங்கம் – அலை.

கடலைக் கறுவிக் கயலைச் செருவிப்
படர்பொற் பிணையைப் படிவித்- தடநற்
20 குவளைக் கமலக் குலமுற்(று) அமுதை
திவளச் சிதறிச் செறுவிக் - கவலைச்
சுரும்பைப் பழிப்பித்துச் சுற்றுவே லொத்துப்
பெரும்பொற் குழையைப் பிடித்துத் - திரும்பிக்
கொலைபழகிச் செம்பொற் குமிழ்சிகரக் காமன்
கலையடையத் தன்னிலே கற்று - நிலையிற்
கருகிவெளுத் துச்சிவந்து கற்றே ருளத்தைப்
பருகிஅமு துங்கடுவும் பாய்ந்து - நிருகிக்
குளிர்ந்து நிழலெழுந்து கூரியதாய் நீண்டு
மிளிர்ந்து வடுவகிரை வென்று - கிளர்ந்த செயங்

---

19. கறுவி – கோபித்து. செருவி–பகைத்து. பொற்பிணை– அழகிய பெண் மான். தடம் - நீர்நிலை.

20. திவள - விளங்க. 'திவளும் வெண்மதி போல் (நாலாயிர திவ்யப் பிரபந்தம், பெரிய திருமொழி) செறுவி –' கோபித்து. கடலையும், கயலையும், மானையும், குவளையையும், தாமரையையும், அமுதையும் உவமை கூற வொண்ணாத அழகிய கண் என்பது கருத்து.

21. சுரும்பு – வண்டு. கவலைச் சுரும்பு என்பதற்குச் சுழன்று உழல்கின்ற வண்டு எனப் பொருள் கொள்ளலாம். இக் கண்ணியிலே கண்ணின் சுழற்சி கூறப்படுகிறது.

22. சிகரம் – முடி.

23. கண்களின் பல்வேறு நிலைகளை அழகுபடச் சொல்லிய படி. கடு – விஷம்.

24. மிளிர்ந்து - புரண்டு. வடு – மாம்பிஞ்சு. வகிர் – பிளந்த துண்டு. 'மாவின் வடுவகிரன்ன கண்ணீர்' (திருவாசகம்) கிளர்ந்து – மேல் எழுந்து.

25 கொண்டபெருங் கூற்றின் குருபீட மாயுலகில்
கண்டவரைச் சண்டையிடுங் கண்ணினாள்; - கெண்
[டைவிழி
குத்தக்குத் தச்சலித்துக் கொப்புக்கட் டித்தரளப்
பத்திப்போற் றோடணிந்த பைங்குழையாள்; - எய்த்த
[வரை
மோகஅனு ராகமுடன் மோந்துசிறு தென்றலினால்
சோக வனல் தணிக்கும் துண்டத்தாள் - பாகினொடு
பண்டைஅமு தந்தேனும் பாளிதமும் பண்ணேழும்
கண்டுமிடங் கொண்ட கனிவாயாள்; - துண்டமதி
வெண்ணிலவால்வெந்த விடாயெல்லாம் தன்னுடைய
தெண்ணிலவால் ஆற்றும் திருநகையாள்; - வண்மை
[கண்டு

---

25. கூற்று - உடலையும் உயிரையும் கூறுபடுத்துபவன், யமன். குரு பீடம் — குருவின் ஸ்தானம். உயிரை வாங்குவதிலே யமன் சிறந்த வெற்றியை உடையவன். அவனுக்கே குருவாக இருப்பன இக் கண்கள் என்றால் அவற்றின் உயிரை வருத்துந்தன்மையை என்னென்பது !

26. கொப்பு — காதில் அணியும் ஒரு ஆபரணம். தரளம்— முத்து. பத்தி - வரிசை. காதள வோடிய கண்கள் ஆகையால் அவை குத்தக் குத்தச் செவிகள் சலிப்படைகின்றனவாம் !

குழை — காது. 'மணித்தோடுங் குழையிலாட' என்ற இடத்திற் போல.

எய்த்தவரை — வருந்தி இளைத்தவரை.

27. அநுராகம் — அன்பு. துண்டம் — மூக்கு.

அவள் மூச்சு சிறு தென்றல்: அது சோகந் தணிக்கின்றது!

28. பாளிதம் — பாலன்னம். பண் — இசை. கண்டு — கற்கண்டு. துண்ட. மதி — பிறை.

29. விடாய் — ஆசை. காதலால் வாடுவோரை நிலவு வருத்துகின்றது; அவர்களுடைய ஆசையை நிறைவேற்றும் சக்தி வாய்ந்த சிரிப்பை யுடையவள் அவள். அன்போடு அவள் சிரித்து விட்டால் பிறகு அவதி யேது?

வண்மை — கொடை.

30 சங்கநிதி பதுமநிதி நன்னைச் சுமந்ததுபோல்
செங்களமும் செம்முகமும் சீர்படைத்தாள் ; - சங்க
வேயூரந் தோன்றிவளர் வித்தார முத்தாரங் [ரனுர்
கேயூரந் தோன்றுங் கிளர்தோளாள் ; - சேயூரும்
அஞ்சக் கரமேந்தி ஆங்கு வளை தாங்குமால்
கஞ்சக் கரம்போல் கரம்படைத்தாள்; - சஞ்சலமாய்ப்
பொற்றிருமேருச் சரிந்து போனுலு நான்முகத்தோன்
மற்றிருமேரு படைத்து வைத்ததெனை - முற்றும்

---

30. சங்கநிதி பதுமநிதி – குபேரனது நவ நிதிகளுள் இரண்டு.

களம் – கழுத்து. செங்களம் - சிவப்பு நிறமுள்ள கழுத்து. கழுத்து சங்கு போன்றுள்ளது. முகம் தாமரை போன்றுள்ளது. ஆகையால் சங்க நிதி பதுமநிதியைச் சுமந்திருப்பது போலக் கழுத்தும் முகமும் விளங்குகின்றன !

31. வேய் ஊர் – மூங்கிலாகிய ஊர். சிவன் மூங்கிலிலே ஒளிந்திருந்ததாகக் கதை. 'மூங்கிலிலே போயொளிந்தான் முக்கண் சாமி;' அதனுல் மூங்கில் சிவனுக்கு ஊராயிற்று முத்துப் பிறக்கும் இடங்களில் மூங்கிலும் ஒன்று என்பர்.

கேயூரம் – தோளில் அணியும் ஒரு ஆபரணம். 'புதுவயிரக் கேயூரம் பூட்டி' (ஏகாம்பர நாதர் உலா) கிளர் – எழுச்சி பெற்ற. சேயூரும் – சிவப்பு நிறம் விளங்கும்.

32. அஞ்சக்கரம் – அம் - சக்கரம் – அழகிய சக்கரம். வளை – சங்கு. கஞ்சக் கரம் – தாமரை போன்ற கரம். திருமாலின் கரம் போன்ற அழகிய கரத்தை உடையவள்.

சஞ்சல மாய் – நிலையில்லாமல்.

33. பொற்றிரு மேரு – பொன் - திரு - மேரு. மேரு பொன் மலை. நான் முகத்தோன் - பிரமன்.

மற்றிரு மேரு – மற்று - இரு – மேரு. இது முதல் 43-வது கண்ணி முடிய ஸ்தனங்களின் வருணனை.

விரட்டியொரு மூவுலகும் வெற்றிகொண்டு மாரன்
இரட்டைமுடி வைத்ததிது கொன்டென்னத் - திரட் [டியே

35 அண்ட மனைத்துமிரண் டாக்கியொரு மின்கொடிமேல்
சண்டைமதன் காட்டுமிந்திர சாலமெனக் - கண்டகிரி

முற்றுமிரண் டாய்முளைத்து முற்பகையாம் இந்தி
செற்ற முடிக்கெழுந்த சீற்றமெனப்-பற்றிப் [ரன்றன்

பொருகூற்ற மஞ்சிப் புறங்கொடுப்ப மண்மேல்
இருகூற்றந் தோன்றினவோ என்னச் - சுரர்கூட்டம்

அந்தா னவர்க்காய் அமுதகல சத்தையொளித்
திந்தா ரணிமே லிருத்தியென - மெத்தப்

புளகித்துக் கர்ச்சித்துப் பூரித்துச் சற்றே
இளகிக்கச் சிட்டுப்பொற் பேந்திக் - களபக்கற்

---

34. மாரன் – மன்மதன்.

மூவுலகையும் வென்ற மாரனுக்கு இரண்டு கிரீடங்கள்!

35. மின் கொடி மேல் – மின் போன்ற சிறிய இடையின் மேல். சண்டை மதன் – காமத்தை உண்டாக்கி அதனால் சண்டையை விளைவிக்கும் மன்மதன். கச்சினுள்ளே தோன்றும் ஸ்தனங்கள் மின் கொடியில் மன்மதன் காட்டும் இந்திர ஜாலம் போலிருக்கின்றன.

36. செற்றம் - கோபம். சீற்றம் - கோபம். ஒரு காலத்தில் மலைகளுக்குச் சிறகுகள் இருந்தன என்பதும் அவற்றை இந்திரன் வெட்டித் தள்ளினான் என்பதும் கதை.

37. கூற்றம் – யமன்.

யமனும் முதுகுகாட்டி யோடும்படி புறப்பட்ட இரு ஸ்தனங்களாகிய யமன்கள்!

சுரர் கூட்டம் – தேவர் கூட்டம்.

38. தானவர் - அசுரர்.

தாரணி – பூமி. அசுரர்களுக்குத் தெரியாமல் அமுத கலசத்தைத் தேவர்கள் இங்கே மறைத்து வைத்திருக்கின்றனர்.

39. கச்சு – முலைக்கச்சு. பொற்பு – அழகு.

களபக்கற்பூரம் – கலவை செய்த பச்சைக் கற்பூரம்.

40 பூரத்தைப் பாளிதத்தைப் பூசிக்கண் தாபித்துப்
பாரித்துப் பாலித்துப் பாவித்துந் - தூரத்தில்
பச்சென்றும் புற்கென்றும் பக்குவத்தில் தப்பாமல்
வெச்சென்றும் தண்ணென்றும் மெத்தென்று - நிச்சந்
தருக்கி நெருக்கித் தனகி இறுமாந்து
செருக்கியிணங் கிச்சுணங்கு சேர்ந்து - கரிக்குலத்
நாட்டங்களெல்லாம் நடுங்கப் பெருந்தவத்தோர் [தின்
கூட்டங் குலைக்கும் குவிமுலையாள் ; - நாட்டை

---

40. பாளிதம் – சந்தனம். தாபித்து – நிலை நிறுத்தி.

41. தூரத்தில் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி தானே! பக்கத்தில் நெருங்கும் போதுதான் புற்கென்று போய் விடுகிறது. புற்கெனல் – பயனில்லாது போதல்.

வெச்சென்று – வெம்மை யாதல்; ‘தண்ணன்று வெச்சென்று’ (மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்)

நிச்சம் – எப்பொழுதும்.

42. தனகி – சரசஞ் செய்து. இறுமாந்து –கருவமடைந்து

சுணங்கு – தேமல். சுணங்கு சேர்ந்திருப்பது அழகாகும்.

கரி – யானை.

43. நாட்டம் – பார்வை. யானைக் கூட்டமே பார்த்து நடுங்குகின்றது.

எண்ணிலாப் பெருந்தவத்தோர் தங்கள் தவப்பயனை மங்கை யொருத்தியின் பாதார விந்தத்தில் அர்ப்பணஞ் செய்து விட்டனர் என்ற கவி ரவீந்திரரின் வாக்கை இவ்வரி நினைவூட்டுகின்றது.

நாடு – உலகம். ‘புலத்தலிற் புத்தேணாடுண்டோ’ என்ற இடத்துப் போல.

அளவிடும்பச் சைத்துளவோ னாலிலையென் றேகண்
வளர இடம் பார்க்கும் வயிற்றாள் ; - அளிகளுடன்
பின்றால விட்ட குழற் பின்னற்பிர காசவொளி
முன்றோகத் தோன்று முறைமையென - நன்னறு
வேரி படிந்தொழுகு மென்கொங்கை காங்கியகஸ்
தூரி படிந்தொழுகுந் தோற்றமென - மாரனுடல்
வேமளவில் உந்திமடு வீழப் புகையெழுந்து
கோமளமாய்த் தோன்றுங் கொழுந்தென்ன - மாமு
கைந்நாளஞ் சுற்றியநீலக்கயிறுநால்வதென [லையாம்
வித்தார ரோமம் விளங்குவாள் ; - முத்தாற்றில்

---

44. நாட்டை அளவிடும் பச்சைத் துளவோன் - உலகளந்த திருமால். துளசி மாலையை அணிந்தவன்.

கண்வளர்தல் - துயில் கொள்ளுதல். திருமால் ஆலிலையில் துயில் கொள்ளுகிறவனல்லவா? இது ஆலிலை தானோ என்று திருமாலே எண்ணும் படியான வயிறு.

அளி-வண்டு. குழலில் சூடிய மலரில் மொய்க்க வந்தது.

45. பின் - நால. நால - தொங்க. குழல் - கூந்தல். குழற் பின்னலின் சாயல் முன்னால் தெரிவது போன்ற உரோம வரிசை.

46. வேரி - வாசனை. கொங்கையிற் பூசிய கஸ்தூரி ஒழுகி வருவது போன்ற உரோம வரிசை.

47. கோமளமாய் - மென்மையாய்; 'கோமளக் கொழுந்து' (திருவாசகம்.) அழகாய் என்றும் கூறலாம்.

மெல்லிய புகைக் கொழுந்து போன்ற உரோம வரிசை. அப்புகை எப்படி உண்டானது? மன்மதனைச் சிவன் எரித்த போது அவன் உடல் உந்தியாகிய மடுவிலே விழுந்து உண்டானது!

48. நீலம் - கறுப்பு. நால்வது - தொங்குவது.

வித்தாரம் - பரந்த.

முத்தாறு - அழகிய நதி.

வெள்ளஞ் சுழிக்கும் வியன்சுழிபோல் மேதினியோர்
உள்ளஞ் சுழிக்கின்ற உந்தியாள் ; - தெள்ளியதோர்
50 வான்படைத்தோன் நன்பதவி மாருதிபெற் றால்பின்பு
தான்படைக்கில் உண்டாந் தனிமருங்காள் ; - மீன் [பிடித்துத்
திக்காளுந் தேரோன்றன் தென்றற்கா லங்கழிந்தால்
அக்காலந் தேராகும் அல்குலாள் ; - மிக்க
கலவிதனில் வேருங் கலைவேலிக் குள்ளே
குலவுகின்ற வாழைக் குறங்காள் ; - அலவனையோர்
பொங்குவரால் முட்டுவது போலமுழந் தாளும்
தங்குகணைக் காலும் தருமழகாள் ; - இங்கிதஞ்சேர்

---

49. வியன் – அழகிய. மேதினி – பூமி.

உள்ளஞ் சுழிக்கின்ற – உள்ளத்தை அலையச் செய்யும் படியான.

தெள்ளிய – தெளிவாக விளங்கும்.

50. மாருதி – வாயு மைந்தன்.

மருங்கு – இடை. தெளிந்த ஆகாயம் சூனிய மானது. அதைப் படைத்தவனுடைய பதவி வாயு புத்திரனுக்கு வந்தால் அவன் எவ்வாறு இடையைப் படைப்பான் ! உண்டோ இல்லையோ என்று ஐயுறும் படியான சிறிய இடையுடையவள் என்பது கருத்து.

மீன் பிடித்து - மீனைக் கொடியாகப் பிடித்து. மீன் கொடி மன்மதனுக்கு உரியது.

51. மன்மதனுக்குத் தேர் தென்றல்.

52. கலை – சீலை. குறங்கு – தொடை.

அலவன் – நண்டு.

53. பொங்கு வரால் – பருத்த வரால். கோபித்த வரால் என்றுஞ் சொல்லலாம். வரால் என்பது ஒரு வகை மீன். 'முழந்தாட் குவமை கேட்கிலவை நண்டு'; 'செவ்வரால் கவ்வி நின்ற சீர் அலவனோ முழந்தாள்' என வருவன காண்க.

இங்கிதம் – இனிமை.

மைந்தரா னேரை மதித்துமதிப் பாய்நிறுக்கும்
பைந்தரா சன்ன பரட்டினாள் : - கந்துகம்போல்
வைத்த குதியாள் ; அனம் போல் வாய்த்தநடை [யாள் ; நடக்கு
மெய்த்தகுதியாள் ; சீர் மிகுதியாள் ; - சித்தசனன்
பொத்தகமே வாடியதிப் பொத்தகமே தாழ்ந்திறைஞ் [சும்
பொத்தகமே யான புறவடியாள் ;-பத்தி பெறப்
பத்துமதி யைப்பதித்த பைம்பவழக் கொத்துப்போல்
சித்திரநகப் பத்துவிரற் செப்பத்தாள்;-கைத்தாயர்
பஞ்சிப்போ தேயெழுதிப் பார்த்தாலோ வென்றுரைக் [கும்
செஞ்சொற்கேட் டேசிவக்கும் சீரடியாள்; - மிஞ்சவே

---

54. மதித்து – அளவிட்டு. மதிப்பாய் – கௌரவமாய்.

பைந்தராசு - அழகிய தராசு. பரடு – காற் கரண்டை; 'புடைச் சிறு பரடு புல்லிக் கிண்கிணி சிலம்பொடார்ப்ப' (சீவக சிந்தாமணி)

கந்துகம் – குதிரை.

55. வைத்த குதியாள் – குதிங்காலை யுடையவள்.

அனம் போல் - அன்னம் போல்.

மெய்த் தகுதியாள் – உண்மையான தகுதி வாய்ந்தவள் குதி, தகுதி, மிகுதி என்று வந்த சொல்லழகு நோக்குக.

சித்தசன் – மன்மதன்.

56. பொத்தகம் – காதலால் துளைக்கப்பட்ட உள்ளம்.

பொத்தகம் – புத்தகம். புறவடிக்குப் புத்தகம் உவமை.

57. மதி – நிலா.

செப்பம் – செவ்வை. 'பஞ்சி யூட்டி மேற்பட மதியம் சூட்டி' எனக் கம்பர் கூறுவது கருதற்பாலது.

கைத்தாயர் – வளர்ப்புத் தாயர்.

58. செம்பஞ்சுக் குழம்பைப் பாதத்தில் அணிதல்வழக்கம்

வேம்பாகை வேம்பாக்கி விண்ணமுதைத் தப்பாக்கித்
தேம்பாகை நஞ்சாக்கும் தீஞ்சொல்லாள் - ஆம்
[பளிங்கில்

60 கன்னில் புனை மணியில் கண்ணா டியிலன்றி
மண்ணில் தனக்குவமை மாற்றினாள் ; - எண்ணித்
தெரிவுற்ற மாரனுக்குச் செங்கோல் செலுத்தும்
அரிவைப் பருவத் தணங்கு - பரவையிலே
சந்தனமும் திண்குரவும் தண்கமுகும் சண்பகமும்
சுந்தரியும் பாடலியும் சூழ்பலவும் - மைந்தகிலும்
ஞாழற் குலமும் நரந்தையொடு புன்னைகளும்
சூழப் பொலிந்திலங்கு சோலைவாய், - ஆழித்

---

59. நன்றாக வெந்து இறக்கிய பாகு வேம்பாகின்றது; அமுதம் சுவையில் குறை யுள்ளதாகின்றது; தேம்பாகு நஞ்சே ஆய் விடுகின்றது அவளுடைய சொல்லுக்கு முன்னால் !

60. பளிங்கு, கண்மணி, கண்ணாடி ஆகிய வற்றில் அவளுடைய விம்பத்தையே கண்டு அதனை உவமை கூறலாமே ஒழிய உலகத்தில் வேறு உவமை கூற இயலாது.

61. தெரிவுற்ற – தெரிந்தெடுக்கப் பட்ட.

அரிவை – இருபது வயது முதல் இருபத்தைந்து வயதிற் குட்பட்ட பெண். அணங்கு – தெய்வ மகள்.

மன்மதன் தனது ஆட்சி சிறந்திருக்க வேண்டி ஆலோசித்து இவளைத் தெரிந் தெடுத்திருக்கிறான்.

பரவையிலே – பருவையிலே என்றும் பாடம்.

62. திண் - வலிமையுள்ள. குரவு – குராமரம்

சுந்தரி, பாடலி மரவகைகள்.

மைந்தகில் – வலிமை பொருந்திய அகில்.

63. ஞாழற் குலமும் – புலி நகக் கொன்றை, பொன்னா விரை, கோங்கு முதலியனவும். நரந்தை – ஒரு கொடி.

இலங்குதல் - விளங்குதல்.

ஆழி – கடல்.

திருப்போல் மடப்பிணைபோல் சித்திரம்போல் மின்னல்
உருப்போல் மதவேள் உயிர்போல் - விருப்பம் சேர்
சொன்னம்போல் கொம்புபோல் தோகைபோல்
[பூவுலகில்
அன்னம்போல் வந்துலவும் அப்போதில், - முன்னம்
[போய்த்
தெய்வரம்பை யென்றே தியங்கிப் பெரும் பயத்தோ
டுய்வரம்பைப் பற்றி ஒதுங்கினேன் - அவ்வளவில்
மண்மே லடியாளும் மாறு இமைப்பாளும்
எண்மேவு மானிடப்பெண் ணென்னவே - உண்
[மேவும்
ஐயம் தெளிந்தேன் : அருங்காதல் மீதூர்ந்தேன் ;
மெய்யுந் தளர்ந்து வெளிநின்றேன் - நையனல்லாள்
முன்னுகச் சென்றேன் ; "முளரிப் பூங் கோயிலைவிட்
டின்னுகப் பூங்காவில் ஏன்வந்தீர் ? - மின்னேயும்

---

64. திரு – இலக்குமி. ஆழித்திரு – பாற்கடலிற் பிறந்த இலக்குமி. மடப்பிணை – இளமான்.

65. சொன்னம் – சுவர்ணம் – பொன். தோகை – மயில்.

66. பயத்தொடு - உய் – வரம்பு. உய்தல். தப்பித்தல். வரம்பு – வழி. உய்யும் வழி.

67. என் மேவு - எண்ணி நேசிக்கும் படியான.

உண்மேவும் – உள்ளத்தில் பொருந்திய.

68. மீதூர்தல் – மேலும் மேலும் வருதல்.

69. முளரி – தாமரை. அவளை இலக்குமி என்று குறிப்பாகச் சொல்லுகிறான்.

கோயிலை விட்டு இந் நாகப் பூங்காவில் ஏன் வந்தீர்? நாகப் பூங்கா – புன்னை, ஞாழல் முதலிய மரங்கள் உள்ள அழகிய சோலை.

70 மெய்க்குற்ற மோஎன் விழிக்குற்ற மோபிரமன்
கைக்குற்றமே மருங்குல் காண்கிலேன் - எக்குற்றங்
காட்டீர்? மிகமருங்குல் காரிகளைக் கண்டுகடன்
கேட்டிரிலையோ? கிளிமொழியீர்! - நாட்ட முடன்
பூந்தடத்தில் இப்போது பூப்பறிப்பார் போலவே
மாந்தருயிர் பறிக்க வந்தீரோ? ஏந்திழையீர்,
இங்கு நடந் தாலன்ன மிங்கு நிற்குமே ;- நின்றால்
நங்கமலத் தோனு நடப்பனோ? மங்கை நல்லீர்,
இச்சாயல் கண்டு மயில் இங்குவந்தா - லுங்கள்மேல்
மெய்ச்சாயல் வேலோன் வெகுளானோ? - அச்சமற
75 ஈரமொழிக் காய்க்கிள்ளை இங்குவரக் கண்டக்கால்
வீரமதன் தண்டெடுத்துவிட்டாலோ?-பார்வைகண்டு

---

70. உனது இடையைக் காண முடியாதது உன் உடம்பில் உள்ள குறையாலா? என் விழியிலுள்ள குற்றத்தாலா? அல்லது பிரமன் அதைச் செய்து வைக்க மறந்த குற்றத்தினுலா என்று அதிசயத்துக் கேட்கிறான். நுண்ணிடை என்பது எவ்வளவு அழகுபடக் காட்டப் பட்டிருக்கிறது!

71. பருத்த மத்தள இடையுடையவர்களைக் கண்டு கடனுகவாவது சிறிது வாங்கிக் கொள்ளக் கூடாதா!

73. கமலத்தோன் - பிரமன். உங்கள் நடை அழகைக் கண்டு பயில அன்னம் இங்கேயே நின்றுவிடும். பிறகு வாகனமில்லாது பிரமன் நடந்தா செல்லுவான்?

74. மெய்ச்சாயல் வேலோன் – உண்மையான சிறந்த அழகினையுடைய வேலோன். வெகுளல் – கோபித்தல்.

75. ஈர மொழி - இனிய மொழி. கிள்ளை – கிளி.

தண்டெடுத்தல் - படையெடுத்தல்.

மானிங்கே நிற்கையினால் மானைத்தேடிப் பரமன்
நானிங்கே வந்தால் தடுப்பவரார்? - கானற்
குழல்செய்த சொல்லீர், குளிர்காவில் இந்த
நிழல்செய்த மாதவமோ, நின்றீர்? - தழைத்த
வடமேந்து கொங்கையுரோ மாவலியு மாயன்
குடமேந்தி நின்றாடுங் கூத்தோ? - வடுவார்ந்த
நஞ்சங்கே பாம்பிங்கே நத்தங்கே முத்திங்கே
மஞ்சங்கே மின்னிங்கே மாதரீர் - செஞ்சொல்
80 அடுக்கின்ற வேதா அடுக்கைக் குலைத்துப்
படைக்கின்ற போதே படைத்தான் - வடக்கொங்கை

---

76. பரமன் மானை ஏந்தியுள்ளார் அல்லவா?

கானல் – மலையைச் சார்ந்த சோலை.

77. குழல் செய்த சொல்லீர் – குழலில் உண்டாகும் இனிய இசை போன்ற சொல்லையுடையவளே.

கா - சோலை.

78. வடம் – கழுத்தில் அணியும் சரம். 'இடை மங்கை கொங்கை வடமலை' (திரு வேங்கடத்தந்தாதி) உரோமாவலி– உரோம வரிசை. ஆவலி – வரிசை; 'மஞ்சுள ரோமாவலி' (கம்ப ராமாயணம்)

குட மேந்தி நின்றாடுங் கூத்து – கண்ணன் வாணனுடைய அரண் சூழ்ந்த வீதியில் குடம் கொண்டு ஆடிய கூத்து (சிலப்பதிகாரம் உரை)

வடுவார்ந்த – பழி நிறைந்த

79. நஞ்சு – விஷம். நத்து – சங்கு.

மஞ்சு – மேகம்.

80. இனிய சொற்களை அடுக்கி வைக்கும் பிரமன் இங்கு மட்டும் அடுக்கைக் குலைத்துப் படைத்திருக்கிறான்.

வடக் கொங்கை - வடமேந்து கொங்கை என்று முன்பே வந்துள்ளது.

அந்தரத்தே நிற்குமோ ? ஆர்க்கும் பரமடியேன்
சந்தயத்தை விட்டுமெல்லத் தாங்கவோ ? பைந்
[தொடியீர்,
முத்தனே கஞ்சேர் முலைக்கயிலா யத்தனிலே
பித்தனெனைச் சேர்க்கிற் பிழையாமோ ? - வித்தார
ஓடைகொண்ட நன்சுழிபோல் உந்திச் சுழியிருந்து
வேடை கொண்ட யான் குளிக்க வேண்டாமோ ?
[ஏடுகொண்டு
கொந்திருக்கும் பைந்தார்க் குழல்மேகத் தாடுநான்
இந்திரன்போல் வந்திருந்தால் ஏலாதோ ? பந்தி
[கொண்ட
85 கண்ணான செவ்விக் கருங்குவளைக் கேயடியேன்
பண்ணார் சுரும்பாய்ப் படியேனோ ? விண்ணில்
அடுத்துவருந் தானவர்கள் ஆரமுதம் உண்ணாமல்
தடுத்தவருந் தேவதைநீர் தாமோ ? - எடுத்தமுகம்

---

81. சந்தயம் – சந்தேகம்.

தொடி – வளை.

83. வேடை – வேட்கை ; 'வள்ளிக்கு வேடை கொண்ட பெருமாளே' (திருப்புகழ்)

ஏடு – பூவிதழ்.

84. கொந்து - கொத்து.

ஏலாதோ – பொருந்தாதோ.

பந்தி – வரிசை.

85. செவ்வி - அழகு. குவளை மலர் கண்ணுக்கு உவமை.

பண்ணார் – இசை பொழியும். சுரும்பு - வண்டு. படிதல் - தங்குதல்.

86. தானவர் – அசுரர்.

ஆரமுத முண்ணாமல் தடுத்த தேவதை மோகினி. அவள் அழகைக் கொண்டவள் என்றபடி.

நாலே படைத்து நகைபடைத்துப் பங்கயத்தோன்
மாலே படைத்ததுவும் மாலேயோ? - சீலமுடன்
மருவியுமைச் சேர்ந்திருந்து வாழாம லன்றோ
பொருவிசையன் பேடியாய்ப் போனான்? - திரிபுரத்
[தைக்
செற்றவனும் கொல்லிச் செழும்பாவை யும்நகைக்கக்
கற்றதுவும் இந்தநகை கண்டேயோ? - முற்றுலகில்
பாவையர்போல் காமப் பரியாற்ற மாட்டாத
கோவையமு தத்தையேன் கொண்டிருப்பீர்? - ஓவிய
[மென்

---

87. பங்கயத்தோன் - பிரமன்.

மால் – மயக்கம்; திருமால். பங்கயத்தோன் மாலடைந்தான்; பங்கயத்தோனைத் திருமால் படைத்தான் என இரு பொருள் தொனிப்பது காண்க.

சீலம் – ஒழுக்கம்.

88. பொருதல் – போர் செய்தல். விசையன் – அர்ச்சுனன்.

89. செற்றவன் – அழித்தவன். சிவன் சிரித்துப் புரமழித்தான். கொல்லிச் செழும் பாவை – கொல்லி மலையில் தேவரால் நிருமிக்கப்பட்டு நோக்குவோரைத் தன் வசப்படுத்தும் மோகினிச் சிலை.

பார்த்தோரை வசப்படுத்தும் சக்தியும் அவரை வதைக்கும் சக்தியும் அம்மங்கையின் சிரிப்பிற்கு அமைந்திருக்கின்றன. ஆதலால் கொல்லிப்பாவையும், சிவனும் அவளிட மிருந்துதான் அவற்றைப் பெற்றார்களோ?

90. கோவை யமுதம் – கோவைப் பழம் போன்ற இதழ்களாகிய அமுதம்.

ஓவியம் – சித்திரம்.

றெல்லாரும் என்னுமல் என்னுள்ளந் தேறவொரு
சொல்லாகி லும்தெளியச் சொல்லிடீர் - கல்லான
நெஞ்சுமக்குத் தந்த நெடும்பாதகம்பலித்தோ
கஞ்சனவன் பேர்விளங்கக் கண்டிலோம் ? - தஞ்ச
[முடன்
நந்தான ஊழியங்கள் நான்செய்யவோ ; அதற்கு
வெந்தான காமனையேன் வேண்டுவிர் ? - முந்தக்
குலவியகூற் றென்றுவிழிக் கூற்றம் இரண்டானல்
உலகுதனில் கூற்றமூன் றுண்டோ ? - கலவியிலோர்
95 பெண்ணைச்சேர்ந் தாயிரங்கண் பெற்றனிப் போது
[மைநான்
கண்ணுற்று லும்இலக்கங் கண்ணுமோ ?- நண்ணும்
பெருங்கொற்ற வேள்வடிவு பெற்றிலேன் என்றே
இரங்கித்தான் பார்த்தி ரிலையே - தரங்கித்தான்

---

92. கஞ்சன் - பிரமன். பிரமன் உமக்குக் கல் நெஞ்சு படைத்தனன் போலும். அந்தப் பாதகச் செயலினல் தானே அவனுக்கு உலகில் புகழ் இல்லாது போயிற்று. பிரமனுக்குக் கோயில் வழிபாடுகள் இல்லாமை இங்கு குறிப்பிடப்படுகிறது.

தஞ்சமுடன் – பணிவுடன்.

93. நந்தான - ஆக்கம் தருகின்ற.

94. குலவிய – விளங்கிய.

95. இந்திரன் அகலிகையைப் புணர்ந்தது குறிக்கப்படுகிறது.

96. கொற்றம் – வெற்றி. வேள் – மன்மதன்; முருகன்.

தரங்கி - மனக்கலக்க மடைந்து.

6

ஆதரவால் மைந்தரைமால் ஆக்கியே இவ்வுலகின்
மாதரையும் மாலாக்க வந்தீரோ ? - தீதிலாத்
துய்யோன் மருண்டிடநீர் தோன்றுக்கால் இந்தயுகம்
ஐயோ கலியுகந்தான் ஆகாதோ ! - கையார்ந்த
கூரிதக மென்னும் குடாரியிட்டு நானேற
வீரமுலை யானையைஎன் மேல்விடுவீர் - பேராசை
ஆற்றில் விழுந்தளனை அந்தத் திருத்தோளில்
ஏற்றிக் கரையேற்றி ஈடேற்றிக் - கூற்றுவன்போல்
மாகாமன் கொல்லுமுன்னே வாயமுதை இங்கருத்திச்
சாகா வரமெனக்குத் தந்தருளீர் - ஆகா அவ்
வாரம்போல் நூபுரம்போல் ஆடைபோல் மேகலா
பாரம்போல் மெய்தீண்டிப் பார்த்தேனோ?-பாரிடத்தில்
மெய்க்காத லேயளித்து வெம்புவிப்ப நல்லாமல்
அக்காதல் மாற்ற அறியீரோ ? - தக்கதுதி
செய்தாலோ கெம்பீரச் சேயிழையீர் உம்மைநான்
வைதாலோ வாய்திறந்து வாவென்பீர் ? - எய்தா

---

97. ஆதரவு – அன்பு; 'ஆதரவு கொண்டே யலமந்த வைம்புலமாம் பூதவகை' (கந்தபுராணம்) மால் – மயக்கம்.

பெண்களும் தாங்கள் ஆண்களாகப் பிறக்க வில்லையே என்று எண்ணி மயங்கச் செய்ய வந்தீரோ ? இது 'பெண்டிரும் ஆண்மை வெஃகிப் பேதுறும் முலையினுளை' என்ற சித்தாமணி அடியை நினைவுறுத்துகின்றது.

98. துய்யோன் – பரிசுத்தமானவன்.

99. குடாரி – யானைத் தோட்டி.

100. அருத்தி – உண்பித்து.

101. நூபுரம் – பாதத்தில் அணியும் அணி. மேகலா பாரம் – மாதர் இடையிலணியும் அணி.

பார் – பூமி.

104. சேயிழையீர் – அழகிய அணியை உடையீர்.

இடர்எய்தித் தூறேற்றி என்னையிந்த ஊரில்
மடலேற்றிப் போகவோ வந்தீர் ? - கடலேற்றச்
சேலான கண்ணீர் திருமகளாம் உமைத்தேடி
மாலானேன் என்னவே மார்பனுகிர் - மேலோங்கும்
இந்தமுலை மேருவையே ஏடாக என்உகிரே
தந்த எழுத்தாணி தானாக - முந்தியவேள்
மைப்பாரப் பூசலெனும் மாபார தப்போரை
இப்பார் அறிய எழுதுவேன் - செப்பீர்
நயப்படுமுத் தால்கவிழ்த்து நாவான கையால்
இயக்கிவிழிச் சேல்பிடிக்க எய்தீர் - மயல் கடலில்
பாய்விரித்தே அல்குற்சம் பானேறிச் சம்போகத்
தீவிற்கா மச்செட்டுச் செய்தாலோ - பாவைநல்லீர்
பாத்திர நீர் நட்டுவன்நான் பைந்தரளங் கொள்துகி [லின்
மாத்திரையை நீக்கியிங்கு வந்தாடீர் - பார்த்தும்மை

---

105. எய்தா இடர் – இதுவரை அனுபவியாத பெருந்துன்பம். தூறு – பழிச் சொல். மடலேறுதல் – காதலித்த தலைவியை அடையும் பொருட்டுப் பனைமடலான குதிரைமீதேறுதல். இதன் விளக்கம் முகவுரையில் காண்க.

106. மாலானேன் – திருமாலானேன், மயக்கமடைந்தேன் என இரு பொருள் கொள்க.

107. உகிர் – நகம்.

108. மை – குற்றம்.

109. நயப்படு – விரும்பப்படும்.

இயக்கி – செலுத்தி.

110. சம்பான் - தோணி.

111. பாத்திரம் – நாடகப் பாத்திரம். தரளம் – முத்து.

மாத்திரை - பெரிய திரை.

நச்சிஆகம்தளர்ந்த நாள்மருவ வேழம்வாய்ப்
பிச்சை அருளினால் பிழையாமோ ? - மெச்சவே
காணரிய மாசுவர்க்கும் காட்டமரேன் றால்பஞ்ச
பாணன்கை சேர்த்திடவென் பண்ணுவீர் ? - வாணு
[தலீர்
தென்மாருதக்கொழுந்தும் செவ்வந்தி யும்கண்மார்
என்மோக மாலையைநீர் என்காணீர் ? - துன்மாரன்
115 பேதமறக் கூட்டி அருள் பித்தனையே காட்டென்றால்
வேதனையேன் காட்டி மெலிவிப்பீர் ? - மாதரீர்
தெள்ளியதோர் ஞாயிறுபோல் திங்கள்எழுந் தால்
[செவ்வாய்
வெள்ளியதா கப்பருக வேண்டாமோ?-ஒள்ளியதோர்

---

112. நச்சி - விரும்பி. ஆகம் – மனம்.

113. பஞ்சபாணன் – மன்மதன். வாணுதலீர் – ஒளி பொருந்திய நெற்றியை உடையவரே.

114. மாருதம் – காற்று. செவ்வந்தி – சிவந்த மாலை நேரம்; ஒரு வகைப் பூ. கொழுந்தும் பூவும் வைத்துத் தானே மாலை தொடுக்க வேண்டும் ?

துன் மாரன் – துன்பந்தரும் மன்மதன்.

115. பேதம் – மனம் குழம்புதல். அற - நீங்க. பித்தன் – சிவன்.

வேதனை - பிரமனை ; துன்பம்.

மன்மதனால் ஏற்பட்ட மன வேறுபாட்டை நீக்கச் சிவனைக் காட்டென்றால் வேதனையல்லவா காட்டி மெலியச் செய்கிறீர்.

116. தெள்ளிய – பிரகாசமான. ஞாயிறு – சூரியன். திங்கள் – சந்திரன். செவ்வாய் – சிவந்தவாய்; ஒரு நாள். பருகுதல் – நுகர்தல்.

ஒள்ளிய – ஒளிபொருந்திய.

ஞாயிறு, திங்கள், செவ்வாய், வெள்ளி என்று வரும் நயம்காண்க.

வாரத்தை யான்கேட்க மாதத்தை என்தந்நீர் ?
ஆரத் தனத்தோ டணைந்தருளீர் - காரிகையீர்
நற்கைப் பணத்தையிட்டிந் நாளெனைக்கொள் ளாமல் [வேள்
விற்கைக் கிலக்காய் விடலாமோ ? - பொற்கனகத்
துய்ய சுணங்கு சொரிகுரும்பை மீதிலே
செய்ய திரைமணியைச் சேர்க்கவோ ? - மெய்யாய்
120 அறுபதமே நான்அகற்றி அந்தார் மலரோடும்
குறைவறமுப் பூசனையும் கூட்டவோ ?-பிறைநுதலீர்
செப்பரிய ஓலை சிறப்பாகச் சேர்த்துநான்
அப்பெரிய காதை அளக்கவோ ? - முப்பொழுதும்

---

117. வாரம் – அன்பு. மாதத்தை – பெரிய மனக்கவலை யை. தத்து – மனக்கவலை. வாரம், மாதம் என்ற நயம் காண்க. இங்கு,

யாமெடுத்த தோத்திரங்கண் டின்பப்பள் ளிக்குவந்தால்
சோமனைக்கண் டங்கியெனச் சொல்வேனே என ஒரு கண்ணி வேறொரு பிரதியிற் காணப்படுகிறது.

118. பணம் – பொருள்; பாம்பின் படம்.

விற்கைக்கு – விற்பனை செய்வதற்கு; வில்லை யேந்திய (மன்மதன்) கைக்கு.

பொன் - அழகிய.

119. சுணங்கு – அழகுத் தேமல். குரும்பை – தென்னங் குரும்பை போன்ற முலை.

திரை மணி – கடல் மணியாகிய முத்து.

120. அறுபதம் – வண்டு.

இங்கு,

அஞ்சக் கொடுமால் அகங்காட்டுங் கைகளுக்கு
வஞ்சமற வேவளைகள் வைக்கவோ என ஒரு கண்ணி அதிக மாக வேறொரு பிரதியிற் காணப்படுகிறது.

நம்காம நூல்படிக்கும் நச்சுவடிக் கண்களுக்குச்
சிங்கார மையிடவோ? சேயிழையீர், -பொங்குமுள்ள
பாரத் திரைமணியால் பட்டாடை யால்அல்குல்
தேருக் கலங்காரம் செய்யவோ? - நேருற்ற
செம்பொற் சரணத் திருக்கமலம் தாங்கவோ?
வம்பொற் சிலையை வளைக்கவோ - நம்பால்
வழிந்த இதழ்ப்புதுத்தேன் வந்தாரப் பண்டைப்
பழந்தேனை முன்னே பருகவோ? - செழுந்தாளில்
சேவிக்கவோ விழவோ திண்கவரி வீசவோ
பாவிக்கோர் ஊழியத்தைப் பாலிப்பீர் - ஆவிக்குள்
தேனே மயிலே திருவே மணிக்கொம்பே
மானே'' எனப்போய் வணங்கினேன் -என்றேநான்

---

123. நேருற்ற – திருத்தமாக அமைந்த.

124. நம்பால் – நம்மிடத்து.

125. வந்தார - வந்து நிறைய.

126. பாலிப்பீர் – கொடுப்பீர்.

127. திரு – இலக்குமி. மணிக் கொம்பே - அழகிய கொடி போன்றவளே.

128. ஆற்றா – வலியில்லாத

கோற்றொடியார் – வேலைத்திறமமைந்த கைவளையல்களை அணிந்தவர்.

ஆற்றா வசனத்து அடங்காத நாகம்போல்
போற்றியசொல் கேளாமல் போயினார் - கோற்றொடி
[யார்
பின்கண்டேன்; ஒப்பாகப் பின்னைக்கா ணேன் ; பின்கா
மன்கண்டேன் ; வெஞ்சாபம் வாங்கினான் - என்
[கண்டோ
130 தன்கா தலையளித்த தையலைப்பார்த்தே னென்றோ
என்காரியங் காண எண்ணினான் - பைங்காவில்
கோட்டுப்பூ நீர்ப்பூ கொடிப்பூவெல் லாந்தொடுத்து
நாட்டுப்பூ வுள்ளவெல்லா நாட்டினான் - மீட்டுப்பூப்
பார்த்தான் முகைகாணான்பத்திரத்தில்கைவைத்தான்
ஆர்த்தான் விழுந்தேன் அயர்ந்திட்டேன் - வேர்த்
[தாகம்

---

128. ஆற்றா – வலியில்லாத

129. பின் கண்டேன் – பின் புறத்தைக் கண்டேன். ஒப்பாகப் பின்னைக்காணேன் - அதற்கு ஒப்பான அழகிய பின் புறத்தைக் காணேன்.

பின் காமன் கண்டேன் – பின் காமனைக் கண்டேன். அவன் உடனே வில்வளைத்து விட்டான்.

என் கண்டோ – எதைக்கண்டோ.

130. தையல் – மாது.

131. கோட்டுப் பூ, கொடிப் பூ, நீர்ப்பூ, புதர்ப் பூ எனப் பூ நான்கு வகை. நாட்டுதல் – நிலை பெறச் செய்தல்.

132. முகை – அரும்பு. பத்திரம் - இலை.

ஆர்த்தல் – சப்தம் செய்தல்.

ஆகம் - உடல். ஆகம் வேர்த்து.

வம்பருத் தூணி மலர்ப்பாண மேனிரம்ப
அம்பருத் தூணிபோ லாயினேன் - கொம்பில்
கருங்கோ கிலங்கூவக் கன்னிலூறும் புண்ணூடே
அருங்கோல் நுழைந்ததுபோல் ஆனேன் - மருங்காக
135 வாய்த்திட்ட தென்றல் வரக்கண்டு சாகாமல்
கோத்திட்ட மீன்போல் குறைந்திட்டேன் - பூத்தங்கு
எழுந்தமதி கண்டங்(கு) இடையில் குறைக்க
விழுந்தமர மொத்தேன் வினையேன் - முழங்கிச்
சிறந்தகடல் ஆர்ப்பச் சிறந்த கடலூடே
பறந்திடுகா கம்போல் பறந்தே - நிறந்தகூர்
ஏங்கிட் டலரும் இருநலக் கொள்ளிக்குள்
வேங்கட் டெறும்புபோல் வெம்பினேன் - பாங்கன்
எடுத்தான் அணைத்தான் இயல்பாய் முளரி
படுத்தான்; அணைமேல் படுத்தேன் – தொடுத்தநிலை
140 பேர்ந்தேன் ; அயர்ந்தேன் ; பிழைபெற்றுச் செய்கை [யெலாம்
சோர்ந்தேன்;மறந்தேன்;துயில்கொண்டேன்-சேர்ந்த

---

133. வம்பு – வாசனை. அரு – நீங்காத. தூணி– பூந்தாது. அம்புப் புட்டியில் அம்பு எப்பொழுதும் இருக்கின்றது. மன்மதனுடைய மலரம்பு என் மேல் நிறைந்ததால் நானும் அம்பருத் தூணியைப் போலானேன்.

134. கோகிலம் - குயில்.

135. குறைதல் - வருந்தி உயிர் ஒடுங்குதல்; 'கணவன் குறையக் குறைவாள்' (கம்பராமாயணம்)

பூத்து – மலர்ந்து ; 'மலர்ந்தது நெடுநிலா' என்றாற் போல.

136. குறைக்க - வெட்ட.

138. ஏங்குதல் – சப்தமிடுதல். அலரும் – விளங்கும் வேங்கட்டெறும்பு – வேகும் கட்டெறும்பு.

பாங்கன் – தோழன்.

139. அணை – மெத்தை.

கொலைக்காரியா என்னைக் கொல்லாமல் கொன்ற
கலைக்காரி யைக்கனவில் கண்டேன் - நிலைக்காதல்
சொல்லிப் பரதவித்துத் தொழுதுமோ கக்கள்ளாம்
முல்லைத் திருநகைக்கு முன்னின்றேன் "நல்லசெவ்வி
ஆகத்தைத் தாரீர்நீர் ஐயோ அடித்தலைமேல்
மோகத்தை ஏன்தந்து முன்னின்றீர் ? - சோகத்தால்
மால்கொண்டு வந்தவரை வாழ்வியா மல்நயன
வேல்கொண்(டு) எறிந்தபழி விண்போமோ ? - பால்
[கொண்ட
சொல்லியரே என்மாலை தோளணிந்தே கருப்பு
வில்லியார் தம்மை விலக்கிடீர் - செல்லுறையும்
மட்டாரும் பூங்குழலீர் வாலிபம்போ னல்பின்னே
கிட்டா தெனும்வார்த்தை கேளீரோ ? - தொட்ட
[பெருங்
கோபத்தைப் போடீர்பைங் கோபத்தைத் தாரீர்என்
தாபத்தைத் தீரீர் தளர்வகற்றீர் - விபத்து
மல்குகின்ற என்றன் மதிவிழுங்கும் பாம்பைநீர்
அல்குலென்று கொண்டிருக்க லாமோ?-நல்லவர்நீர்"
என்றேன் ; நகைத்தார் : இடமிதுவே என்றுநான்
சென்றேன்: திருமேனி தீண்டினேன் - ஒன்றுடலாய்

---

142. செவ்வி – அழகு.

143. அடித்தலை மேல் - அடி முதல் முடிவரையும் அதற்கு மேலும்.

144. நயனம் – கண்.

145. கருப்பு – கரும்பு. கருப்பு வில்லியார் – மன்மதன்.
செல் – மேகம்.

146. தொட்ட – எடுத்த.

147. பைங் கோபம் – அழகிய துகில்.
விபத்து – விபத்து, துன்பம்.

148. மல்குகின்ற – மிகுகின்ற.

அவ்வேல் விழியார் அனுராக மேதந்தார் ;
வெவ்வேடை கொண்டயான் விட்டேனே - செவ்வி
மடிக்குள் இருத்தி மடித்த சுருள்கள்
கடித்த இதழ்சுருள் கண்டு - விடுத்து
வலக்கைக் குறிப்போடு வாரை நெகிழ்க்க
உலப்பில் இடக்கை உறைக்க - முலைக்குள்
முகத்தை இருத்தி முனைப்பல் அழுத்தி
அகத்தை உரைக்க அழுத்தி - மிகுத்த
சங்குடன் சிலம்புதண்டை சம்பிரமம் கலம்பகக்
குங்குமம் செறிந்திருந்த கொண்டைவிண்டு-அங்கம்
உடலும் உடலும் உயிரும் உயிரும்
அடைவில் அணையும் அளவில் - நடவயரும்
மெய்போல் கருதி விழித்தேன் விழிப்பளவில்
கையூ டிருந்தாரைக் காண்கிலேன் - உய்வகையாம்
வாழ்வுபெற்ற சம்பரன் வருகையிலே பாற்கடலில்
தாழ்வுபெற்று நிற்பார் தமைஒத்தேன் - மாழ்கிமிக

150. அனுராகம் – காமப்பற்று.
வேடை – காம நோய்.

151. சுருள் – வெற்றிலைச் சுருள்.

152. வார் – முலைக்கச்சு ; 'வாரடங்கு வனமுலையார்' (தேவாரம்)
உலப்பில் - குறைவில்லாத. உறைக்க – அழுத்த.

154. சம்பிரமம் – களிப்பு. கலம்பகம் – கலவை.

155. நடவயரும் – நடக்க விரும்பும்.

157. சம்பரன் தேவலோகத்தைக் கவர்ந்து கொண்டு இந்திரன் முதலிய தேவர்களைத் துன்புறுத்தினன். அவனைத் தசரத சக்கரவர்த்தி வென்று வீழ்த்தி இந்திரனுக்கு அரசு நல்கினன் என்பது கதை. அமிர்தம் கைக்கெட்டும் தருணத்தில் சம்பராசுரன் வந்து விட்டால் தேவர்கள் எவ்வாறு ஏமாற்றமும் பயமும் அடைவார்களோ அது போல நான் ஆனேன்.
மாழ்கி – மயங்கி.

வாடினேன் பூங்காவும் வாவிக்கரை உள்ளனபோய்த்
தேடினேன் ; காணேன் ; தியங்கினேன் - நாடியே
'ஏம மடல்அல்ல(து) இல்லைவலி' என்றுரைத்த
தேமருவு வள்ளுவர்சொல் தேறினேன் - காமன்
[எனும்
தெய்வத்தை வாழ்த்திச் சிறக்கும் பனைவெட்டி
உய்விக்கும் சித்திரமடல் உண்டாக்கி, - நைவிக்க
வல்லாளைக் கொங்கையெனும் வல்லாளை நெஞ்ச
[மெனும்
கல்லாளை வஞ்சமொன்றும் கல்லாளைப் -புல்வாயின்
கண்ணாளைப் பூங்குவளைக் கண்ணாளை என்னைஇதம்
பண்ணாளைச் சொல்லிளகும் பண்ணாளை - எண்ணி
[யெனைத்
துப்பாளை வண்ணஇதழ்த் துப்பாளை சண்பகப்பூ
வைப்பாளை மைக்குழலில் வைப்பாளைத் - தப்பாமல்

---

158. வாவி – குளம். தியங்கினேன் – சோர்ந்தேன்.

159. ஏமம் – காவல்.

தே – தெய்வம். மருவும்-விளங்கும். தேறினேன் - நம்பித் துணிந்தேன்.

'காமம் உழந்து வருந்தினர்க்கு ஏமம் மடலல்ல தில்லை வலி' என்று திருவள்ளுவர் கூறி யுள்ளதை நாடி அதே காரிய மென்று துணிந்தேன்.

160. சித்திர மடல் – அதிசயமான மடல்.
நைவிக்க – மனம் வாடும்படி செய்ய.

161. வல் - சூதாடுகருவி. கல்லாள் – படியாதவள்.
புல்வாய் – கலைமான்.

162. பூங்குவளை – அழகிய குவளை. இதம் – இனிமை. பண் - இசை.

163. துப்பாள் – நுகராதவள். துப்பு – பவளம்.

கேவித்த பாநாதி கேசத்தையும் எழுதி
ஊவிக்கும் சித்திரமடல் உண்டாக்கி, - கோவித்துச்
சாடிப் பொருதுவெல்லும் சங்கிராமத் துள்புகுந்
[தங்(கு)
ஈடுற்ற மெய்யில் எலும்பெடுத்துச் - சோடித்துப்
பூண்ட எருக்கணிந்து பூர்ணப்பே ரானந்தத்
தாண்டவனைப் போலே தலைப்பட்டு - "மாண்டமதன்
பாங்காம் சமயபரி பாலன்என்ன வந்தான் ;
வாங்காவெம் காமுகர்கோ மான்வந்தான்-பாங்கான
மங்கையர்வே ளைக்காரன் வந்தான்வந் தான்" என்றே
அங்கு வளைச்சின்னம் ஆர்ப்பெடுப்ப - எங்கும்
தனக்கொப் பிலாதான் தனக்குவமை எய்த
எனக்கும் பெரும்புகழே ஏறச்-சினக்கலியை

---

164. ஊவிக்கும் சித்திரம் – உத்தேசம் செய்து எழுதிய ஓவியம்.

165. சாடி – மோதி. பொருது - சண்டை செய்து.

சங்கிராமம் – போர்.

ஈடுற்ற – வீர மரண மடைந்து பெருமையுற்ற. மெய்யில்– வீரனது உடம்பில்.

166. தலைப்பட்டு – தொடங்கி.

167. பாங்காம் சமயம் – நன்மையான மதம். பரிபாலன்– பாதுகாப்பவன்.

பாங்கான – அழகிய.

168. வேளைக்காரன் - பணியாளன்.

வளை – சங்கு. சின்னம் – காளம்; ஒரு வகை வாத்தியம்.

169. தனக்கொப்பிலாதான் – கடவுள்; 'தனக்குவமை இல்லாதான்' (திருக்குறள்)

கலியை - கலியுகத்தை.

170 மாற்றும்நெய் வங்கபெரு மான்மண்ட லிகரனைப்
போற்றும் பரவையிலே போயேறி, - நேற்றெனக்கு
நின்றேங்கா மல்ஒளித்த நீவிவந்து முன்னேற
மன்றேறி மோக மதமேறி - இன்றேதான்
கன்மாரி பெய்திடினும், காலலேத்து வீசிடினும்
வன்மா கரியலேத்து வாங்கிடினும்,-பன்முறையாய்ப்
பின்னுமுன்னும் நாகம் பிடித்துக் கடித்திடினும்,
அன்னிலேயில் சற்றும் அசையாமல், - சென்னி
தியங்காமல், தூங்காமல், செவ்வி நலியாமல்,
மயங்காமல், ஊர்வேன் மடல்.

---

170. மண்டலிகரன்–அரசன். பரவையிலே–பருவையிலே என்றும் பாடம்.

172. கன்மாரி – ஆலங்கட்டியாகப் பெய்யும் மழை. கால் – காற்று.

வன்மா கரி – வலிமை பொருந்திய பெரிய யானை. அலேத்து – வருத்தி.

173. சென்னி – தலே.

174. தியங்காமல் - சோர்வடையாமல். செவ்வி –தன்மை. நலியாமல் – அழியாமல்.

(முற்றும்)

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
19	10	விளக்கத்துக்கு	விளக்கத்து
19	26	வண்ண முறைத்தலும்	வண்ண முரைத்தலும்
21	18	ஒரே துகையிலேயே	ஒரே எதுகையிலேயே
41	2	கைக் குற்றமே	கைக் குற்றமோ